# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005,பங்குனி 11உ (24-3-74) ஞாயிறு மார்ச் 24 லபர் 29 -புத்தகம் 27 இதழ்-30


# தமிழர் காணிகளே பறிமுதல்!

## புத்தளம் கச்சேரி காணிக்கிளை அதிகாரிகளின் பாரபட்சம்!

### சிலாபம், புத்தளம் தமிழ் மக்கள் குமுறல்!

காணிகளை சுவீகரிப்பதில் புத்தளம் கச்சேரியிலுள்ள காணித்திணைக்களத் திணைக்களத்தினர் அப்பட்டமான இனப் பாரபட்சம் காட்டி வருவதாகவும், வேண்டுமென்றே தொட்டதற்கெல்லாம் தமிழர்களுக்கு சொந்தமாகவுள்ள காணிகளையே தேடித் தேடிச் சுவீகரித்து வருவதாகவும், புத்தளம் சிலாபம், உடப்பு போன்ற பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்!

தமிழர்களிடமிருந்து சுவீகரிக்கப்படும் நிலங்கள் சிங்களவர்களுக்கு கையளிக்கப் படுகின்றன என்றும், தமிழர்களின் நிலங்களைப் பலவந்தமாகப்பறித்து சிங்களவர்களுக்கு கொடுப்பது தான் சோசலிசமா என்றும் அவர்கள் ஆத்திரத்துடன் கேட்கின்றனர்.

இது விஷயத்தில் புத்தளம் கச்சேரியிலுள்ள காணிக்

(7-ம் பக்கம் பார்க்க)

## 'பூவும் கைக்குண்டுபோல பொலிசாருக்கு தெரியலாம்!'

### மந்திரியை வரவேற்க மாணவரைப் பயன் படுத்துவது கூடாது!

### கதிரவேற்பிள்ளை கடும் ஆட்சேபம்;

கல்வி மந்திரியின் எதிர் வரும் வருகையின் போது பள்ளிக்கூட மாணவிகளை தெருவெல்லாம் நிறுத்தி வரவேற்புக்கு கட்டாய ஒழுங்கு செய்யப்படுவதாக அறிகிறேன். இப்படி நீங்கள் செய்வது வேண்டத்தகாத, ஆபத்துக்குரிய செயலாகும். சோசலிசம் பேசும் மந்திரிகள் சிங்கள நாட்டில் கிடைக்காத வரவேற்பை தமிழ் நாட்டில் எதிர்பார்க்க மாட்டார்கள்; ஆகவே இத்தகைய வரவேற்பிற்கு இடமில்லை.

மேலும் இத்தகைய வரவேற்பு மிகவும் ஆபத்தான நிலைமையினை உருவாக்கும். தெருக்களில் மாணவ மாணவிகளை நிறுத்தி, பொலிஸாரின் சம்மதத்தோடு வழிகளைத் தடை செய்தாலும் பொலிசாரே மனம் மாறி அவர்களைத் தாக்கக்கூடும்; வழியில் நிற்பவர்கள் பொலி

(7-ம் பக்கம் பார்க்க)

## உடுவில் பா. உ. இலண்டன் சென்றார்!

இலண்டனில் இத்திங்கள் 19ம் நாள் தொடங்கியகாமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் கருத்தரங்கில் கலந்துகொள்ளுவதற்காக உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் லண்டன் சென்றுள்ளார்

கருத்தரங்கு முடிந்த பின்னர் திரு. வி. தர்மலிங்கம் ரஷியாவுக்கும் வேறு சில நாடுகளுக்கும் சென்று திரும்புவார்.

## தொழிற் சங்கத் தலைவர்கள்

### முதலாளிகளின் கையாட்களாம்!

"தொழிற்சங்கங்களைப் பொறுத்தவரை அவை முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்கும் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்; தொழிற்சங்கத் தலைவர்கள் முதலாளிகளின் கையாட்களாக செயல் படுகின்றனர். நகர்களாகத்

7-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் தமிழுக்கே முதலிடம்!

### கோட்டைக் கல்லாறு இளைஞர்களின் பெயர் மாற்றப் போராட்டம்!

ஈழத்தமிழ் நாட்டில் தமிழ்மொழிக்கே முதலிடம் எனும் கொள்கையை முன்வைத்தும் — தமிழ் நாட்டில் ஓடும் இ. போ. ச பேருந்துகளின் சேரிடப்பலகைகளில் சிங்களத்துக்கு முதலிடம் தரப்பட்டுள்ளதை எதிர்த்தும், தமிழ் இளைஞர்கள் யாருடைய தூண்டுதலுமின்றி ஆங்காங்கே தாமாகவே போராட்டம் நடத்திவருகின்றனர்;

தமிழ் நாட்டில் ஓடும் இ. போ. ச பேருந்துகளின் சேரிடப்பலகைகளில் இப்போது சிங்களத்துக்கு முதலாவது பெரிய இடமும் தமிழுக்கு இரண்டா

(7-ம் பக்கம் பார்க்க)

## 'தமிழர்கள் தங்கள் பாதுகாப்பை தாங்களே தேடிக்கொள்ள நேரிடும்!'

"If your Honou'rs Government condones this type of military action that bears criminal tntersity on peaceful civilians, then your Honour's Government will be forcing the TAMILS, the predominant minority of Sri Lanka, who have always lived with peace and dignity, to be on he defensive which is the only way out to safeguard their inalienable rights."

அமைதியான மக்கள் மீது தாக்குதல் நடத்தி குற்றம் புரியும் ஆயுதப்படைகளின் இம்மாதிரி நடவடிக்கைகளுக்கு உங்கள் மாண்புமிகு அரசு உடந்தையாக இருக்குமானால் — தங்கள் பாதுகாப்பை தாங்களே தேடிக்கொள்ளவேண்டிய ஒரு நிலையை நோக்கி, அமைதியுடனும் கௌரவமாகவும் வாழ்ந்து வரும் இலங்கையின் முக்கிய சிறுபான்மை இனத்தினரான தமிழர்களை உங்கள் அரசே தள்ளுகிறது. தங்கள் அழிக்க முடியாத உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு இது ஒன்றே அவர்களுக்குள்ள மார்க்கமாகும்!"

—மேற்கண்டவாறு இலண்டனிலுள்ள இலங்கைத் தூதர் மூலமாக இலங்கைப் பிரதமருக்கு இலண்டன் தமிழர்கள் தெரிவித்துள்ளனர். இலண்டன் தமிழர்களின் மேற்படி கருத்துக்களை கொண்ட மனுவொன்றை இலண்டன் தமிழர்கள் சார்பில், "ஈழத்தில் வாழும் தமிழர்களினதும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களினதும் மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் பாதுகாப்பதையும் காமன்வெல்த்துக்குட்பட்ட தமிழ் ஈழத்தை நிறுவுவதையும்" தனது நோக்கமாகக்கொண்டு இலண்டனில் இயங்கிவரும் குழு இங்கிலாந்திலுள்ள இலங்கைத் தூதரிடம் அண்மையில் கையளித்தது.



(முழுவிபரம் உள்ளே)

## தமிழ் எழுத்து ஒதுக்கப்பட்டதற்கு இ. போ. ச.வே முழுப் பொறுப்பு!



இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப்பலகைகளில் இ. போ. ச. தலைவர் கருத்துப்படி—தலைமைச் செயற்படு முகாமையாளர் உத்தரவின் படியே தமிழ் எழுத்துச் சிறிதாக்கப்பட்டு, சிங்களத்துக்கு பெரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளதென்ற உண்மையை காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியுள்ளார்.

தமிழை இரண்டு அங்குல உயரத்திலும் சிங்களத்தை ஐந்து அங்குலஉயரத்திலும் இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப்பலகைகளில் எழுதவேண்டுமென எல்லா சாலைக்கண்காணிப்பாளர்களையும் இ. போ-ச. தலைமை செயற்படு முகாமையாளர், ஓ. ஜி/ஏ/32ம் எண்ணையும் 1. 12. 73ம் திகதியையும் கொண்ட தமது 1973ம் ஆண்டு 10ம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் பணித்துள்ளார் என்ற விடயத்தை அம்பலப்படுத்தியுள்ளார் பண்டிதர் இரத்தினம்.

போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்;

இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப் பலகைகளில் தமிழ் எழுத்துக்கு பாகுபாடு காட்ட வேண்டுமென்றோ — தமிழ் எழுத்துக்களின் அகலத்தைக் குறைத்து சிறி

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

யாழ்ப்பாணம்—அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில்

# 'பஞ்சாப்படுகொலை!'

## இலண்டன் தமிழர்கள் வெளியிட்டுள்ள உணர்ச்சிமயமான பிரசுரம்!

*ஈழத்தமிழர்களினதும், ஏனைய சிறுபான்மை மக்களினதும் அடிப்படை சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதையும் — காமன்வெல்த்துக்குட்பட்ட 'தமிழ் ஈழம்' ஒன்றை அமைப்பதையும் தனது நோக்கமாகக் கொண்டு இலண்டனில் இயங்கிவரும் குழு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றியும், அங்கு நடந்த பொலிஸ்தாக்குதல் பற்றியும் எடுத்து விளக்கும் பிரசுரமொன்றை 'பஞ்சாப்படுகொலை' எனும்பெயரில் இலண்டனில் வெளியிட்டுள்ளது. அப்பிரசுரத்தின் முதலாவது பகுதியை சுதந்திரன் வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.*

—ஆர்

பத்தாம் தேதி வியாழக்கிழமை இரவு சுமார் 9.25 மணியிருக்கலாம். நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு வெளியே தெருவீதியையும் அதனை மருவியிருந்த மைதானத்தையும் மேவிப்படர்ந்திருக்கிறது தமிழர் கூட்டம். மேதினித் தமிழரெல்லாம் திரண்டு வந்துள்ளாரோ என்னும் படியாக இலட்சக்கணக்கான மக்கள் சிற்றெறும்புக் கூட்டம் போலச் சேர்ந்து ஒருங்கு நெருங்கியிருக்கின்றனர். தமிழ்த் தாயாரும் தந்தையரும் கைக்குழந்தைகளுடனும் கைப்பிடிக் குழந்தைகளுடனும் மொய்த்திருக்கின்றனர். கன்னிப் பெண்கள் அத்தனை அலங்காரங்களுடனும் விழாக்கோலம் காண வந்திருக்கின்றனர். எங்கும் ஒரே மகிழ்ச்சிப் பிரவாகம்.

தொடர்ந்து ஏழு நாட்கள் சிறப்பாக நடைபெற்ற மாநாட்டின் இறுதி நிகழ்ச்சி அப்பொதுக் கூட்டம். அக்கூட்டத்திலேதான் உலகெங்குமிருந்து மாநாட்டுக்கு வந்திருந்த அறிஞர்களைப் பொது மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவும் பரிசில்கள் வழங்கி வழியனுப்பவும் ஏற்பாடாகியிருந்தது. தமிழாராய்ச்சிக் கழகத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அப்பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குகிறார். பொலிசாருக்கு வேலை கொடுக்காமல் விழாக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சாரணப் படையினரும் சீருடையணிந்த இளைஞர்களும் கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கின்றனர்; அடிதடிக்கு வந்த தடியர்களின் கூட்டமன்று அது; தமிழுணர்வு சுவைக்க வந்த தமிழர்களின் கூட்டம். இதனால் கட்டுப்பாடாக நடந்துகொள்கின்றது. தலைவரின் ஆணைகேட்டு கட்டுக்கடங்கிவிடுகின்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் நெய்னர் முகம்மது பேச எழுந்து ஒலிவாங்கியின் முன் வந்து நிற்கிறார். கடல்மடை திறந்தாற்போல கவின் தமிழ் பாய்கிறது. "கன்னித் தமிழே என் பொன்னித் தமிழே; செழுந்தமிழே என் சிந்தைகவர்ந்த தமிழே" எனத் தொடங்கி முழங்கிக்கொண்டிருக்கிறார். இலங்கையில் அரசுரிமை இழந்த தமிழுக்கு அவர் சூட்டிய மைமொழிகள் மக்களை உணர்ச்சிவசப் படுத்திவிடுகின்றன. ஒரே மகிழ்ச்சியொலி, கையொலி, பின்னர் ஒரே அமைதி மீண்டும் பேசுகிறார் பேராசிரியர். இந்நேரத்தில் மக்கள் வெள்ளத்தின் ஓரத்திலே சிறிது பரபரப்பு வலுக்கிறது.

சனசமுத்திரத்தை ஊடுருவிக்கொண்டு பொலிஸ் லாரியொன்று உட்புக முனைகிறது. தொப்புத்தொப்பெனப் பொலிஸ்காரர்கள் துப்பாக்கி சகிதம் லாரியிலிருந்து குதிக்கின்றனர்; குண்டாந்தடியாலும் துப்பாக்கி அடிப்பாகத்தாலும் பொது மக்களைத் தாக்குகின்றனர். 'ஐயோ! அம்மா! என்று சிதறிய மக்கள் பொலிஸ் லாரிக்கு வழி விடுகின்றனர்; தொடர்ந்து பல பொலிஸ் லாரிகள் சனசமுத்திரத்தை ஊடுருவிச் செல்கின்றன. லாரிகளின் முனையில் யந்திரத் துப்பாக்கி வேறு. லாரிகளிலிருந்து பொலிஸ்காரர்கள் ஆங்காங்கே குதிக்கின்றனர். மும்முனைத் தாக்குதல் ஆரம்பமாகின்றது. நூற்றுக்கணக்கான கண்ணீர்புகைக் குண்டுகள் சிதறியோடும் மக்கள் கூட்டத்தை நோக்கி நாலாபக்கங்களில் வெடிக்கப்படுகின்றன. கண்ணீர்ப் புகையினால் மூச்சுத் திணறி திக்குத்திசை தெரியாது ஆட்களோடு ஆட்கள் முட்டி மோதி ஓடும் மக்களைக் கேடயம் தாங்கிய பொலிஸார் குண்டாந்தடியால் அடித்துச் சாய்க்கின்றனர். சாய்ந்து விழுந்த சடலங்களைத் துப்பாக்கியின் பின்புறத்தினால் அடித்து நொறுக்குகின்றனர்;

கூட்ட மேடையைநோக்கி முன்னேறிய பொலிஸ் வெறியர் மேடையிலிருந்த வெளிநாட்டுப் பார்வையாளர்கள் மீதும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசுகின்றனர். எதிர்பாராத வெறித்தாக்குதலினால் செய்வதறியாது திகைத்து நின்ற அவைத் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டின் தாக்குதலால் மயங்கிச் சாய்கிறார். வெளிநாட்டுப் பிரமுகர்கள் சிலரும் மயக்கமடைகின்றனர். ஏனையோரை அங்கிருந்த இளைஞர்கள் பாதுகாப்பாக, வீரசிங்கம் மண்டபத்துக்குள் அப்புறப்படுத்துகின்றனர்.

கண்ணீர்ப்புகைக் குண்டு நாலாபக்கமும் வெடித்த வண்ணமேயிருக்கின்றன. மிருகத்தனமான பொலிஸ் தாக்குதலைச் சற்றேனும் எதிர்பார்த்திருக்காதவர்களாய்' மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்திருந்த மக்கள் குய்யோ முறையோ என்று மரண ஓலமிட்டுச் சிதறி ஓடுகின்றனர். ஓட முடியாதபடி நெருசலில் இடறி விழுந்தோர் ஆயிரக்கணக்கானோர். விழுந்தவர்களின் உடல் காலில் மிதிபட அவர்களுக்கு மேல் ஏறி ஓடுகின்றனர்; குழந்தைகளின் கூக்குரல் நெஞ்சைப் பிழிகிறது. தம் கணவன்மாரைக் கைதவற விட்ட மனைவிமாரின் பரிதவிப்பும் பிள்ளைகளைக் கைதவறவிட்டதாய்மாரின் பரிதவிப்பும் ஒரு புறம். இவற்றுக்கு மேலாக தம் சேலைகள் பிறரின் காலடிகளில் மிதிபட்டுச்சிக்கியதால் அவற்றை நெரிசலில் இழந்துவிட்டு மானத்தை மறைப்பதா உயிரைக் காப்பதா என்ற மரண அவஸ்தையில் அரை நிர்வாணக் கோலத்தில் ஓடிய நூற்றுக்கணக்கான தாய்மார்கள், பருவப் பெண்கள், இவர்களின் பரிதாபம் இன்னொரு புறம். உடுத்த வேட்டியையும் நெரிசலில் இழந்துவிட்டு முழுநிர்வாணக்கோலத்தில் மறைவிடம் நோக்கியோடிய ஆண்களைப் பொலிசார் விரட்டியடித்த விதம் வெறிநாயையும் வெட்கித் தலைகுனிய வைக்கும். இந்த அவலச் சூழ்நிலையில் சிக்குண்ட மக்களில் ஒரு சாரார் அண்மையில் உள்ள றீகல் சினிமாத் தியேட்டரில் தஞ்சம் புக ஓடுகின்றனர். திமுதிமுவென்று உள்ளே புகுந்த மக்களை கூட்டத்தைத் துரத்திவந்த பொலிசார் தியேட்டருக்குள்ளும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுகின்றனர். தியேட்டர் எங்கணும் ஒரே புகைப் படலம். திக்குமுக்காடிபோர் முண்டியடித்துக் கொண்டு வேறு வழியாக வெளியேறி ஓட முற்படுகின்றனர்.

கூட்டம் நடந்த திடலின் பின்புறத்தில் டச்சுக்காரர் காலத்தைய கோட்டை இருக்கிறது. அக்கோட்டையைச் சுற்றிலும் ஓர் ஆழ்ந்த அகழி. நீர் அதிகம் இல்லாவிடினும் சேறும் சகதியும் நிறைந்த அந்த அகழி விஷப்பாம்புகளுக்கும் பூச்சிகளுக்கும் விளைநிலமானது. பொலிசாரின் வெறித்தாக்குதலாலும் கண்ணீர்ப்புகையினால் தடுமாறிப் போனதாலும் சிதறியோடிச்சென்று அந்த அகழியில் வீழ்ந்த நூற்றுக் கணக்கானோர் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட — அங்கு அழுந்திக் கொண்டிருக்கின்றனர்.

கூட்டத்தினர் பல்வேறு கிராமங்களிலிருந்தும் யாழ்ப்பாணம் வந்தவர்கள். பொதுமக்கள் நலன்கருதி நடுநிசி வரை விசேட பஸ்வசதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. திடலிலிருந்தும் கலைந்தோடிய மக்கள் பொலிஸ் கெடுபிடிகளிலிருந்து தப்பியோடுவதற்கெனச் சந்து பொந்து வழியாகப் பஸ்நிலையத்திற்கு ஓடி வருகின்றனர். அவர்களுள் அரை நிர்வாண கோலத்திலும் முழு நிர்வாணக் கோலத்திலும் ஓடி வந்தோருடன் தம் சேலை, வேட்டிகளுடன் தப்பிப் பிழைத்தவர்கள் தம் ஆடைகளைப் பகிர்ந்துகொண்டிருக்கின்றனர். ஓடோடிப் பஸ் நிலையம் வந்த பொது மக்களுக்கு ஒரே ஏமாற்றம்; அங்கு ஒரு பஸ்வண்டி தானும் இல்லை; விசாரித்ததில், பஸ்வண்டி எதுவும் ஓடக்கூடாதெனவும் எல்லாப் பஸ்வண்டிகளையும் டிப்போவுக்குத் திருப்புமாறு பொலிசாரின் கட்டளையெனவும் தெரியவருகிறது. பதைபதைத்த மக்கள் கூட்டம் பின்னே துரத்திவரும் பொலிஸ் வெறியரின் பார்வையிலிருந்து தப்புவதற்காகக் கட்டடங்களின் பின்புறமாகவும் வேறு மறைவிடங்களிலும் ஒளிந்து கொள்கின்றனர்.

நகரின் நடுநாயகமாக இருக்கிறது யாழ்ப்பாண பஸ்நிலையம். பொலிஸ் படையினர் அணியணியாகப் பஸ் நிலையத்திற்கு வருவது மின் விளக்கொளியில் நிதானமாகத் தெரிகிறது: நிலைகுலைந்து போயிருக்கின்றனர் நிராயுதபாணிகளான மக்கள். பொலிஸார் வெறிபிடித்தவர்கள் போலப் பொதுமக்கள் மறைந்திருந்த கட்டிடங்கள் அனைத்தும் கண்ணீர்ப்புகைக் குண்டுகளைத் தாறுமாறாக வீசுகின்றனர். மீண்டும் பொது மக்களின் ஈனக்குரல்.

கூட்ட அரங்கினைச் சுற்றி வளைத்துக்கொள்கின்றனர் பொலிஸார். தம் வெறியாட்டத்தின் முடிவுரையைத் தீட்டுகின்றவன் போல வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுடுகிறான் ஒரு பொலிஸ்காரன். மேலேயிருந்த மின்கம்பி துண்டிக்கப்பட்டு அறுந்து தொங்குகிறது. தொங்கிய முனை கீழேயிருந்த சிலரைச் சுற்றிக்கொண்டிருக்கிறது; "...ஐயோ... அம்மா... கடவுளே...யேசுவே!" என்ற பலரின் கூக்குரல்கள் கேட்கின்றன. நிலத்தில் விழுந்த பலர் துடிதுடிப்பது தெரிகிறது: இளைஞர்கள் சிலர் கம்பியை லாவகமாக அப்புறப்படுத்துகின்றனர். ஒன்று...இரண்டு ... மூன்று... நான்கு... எனத் தமிழ்ப் பிணங்களின் எண்ணிக்கை பெருகவும் மக்கள் ஓலமிட்டு அழுகின்றனர் உலகத்தமிழ் மாநாடு கண்ட பிணங்களின் தொகை ஒன்பது.

பத்தாம் தேதி இரவு மெல்ல மெல்ல அருகவும் பதினோராம் தேதி வெள்ளிக்கிழமை வைகறைப் பொழுதின் மங்கிய நிலவொளியில் நான்காவது உலகத் தமிழ் மாநாடு கண்ட அந்தத் திவ்வியமான திடல் குருசேத்திர யுத்தம் நடந்து முதல்நாள் முடிவுற்ற களம்போலக் காட்சி கொடுக்கின்றது. சிதறிக் கிடந்த பிணங்களுடன் அடியுண்டு உதையுண்டு அரைகுறை உயிருடன் போராடிக் கொண்டிருந்தவர்களும் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படுகின்றனர். பொதுமக்கள் உயிரைக் காப்பதற்காக விட்டுவிட்டோடிய நூற்றுக்கணக்கான சைக்கிள் வண்டிகள், மோட்டார் வண்டிகள், செருப்புகளின் குவியல், சேலை, சட்டை, வேட்டி, ஆடைகளின் பரவல் இத்தியாதி. அந்த ஊழிகூத்திலே தவறிப் போய்விட்ட கன்னிப் பெண்கள் சிலர் என்ன ஆனார்களோ?

ஏன் இந்த ஊழிக் கூத்து? மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் பூரிப்பும் பொங்கத் தமிழுக்கு விழாவெடுத்த யாழ்ப்பாணத்தின் விழாக்கோலம் எப்படி இழவுக்கோலமானது ஏன்? யார் இதற்குப் பொறுப்பாளிகள்? ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் தமிழ் விழாக் காணவந்ததைத் தவிரப் பண்ணிய வேறு பாவம்தான் என்ன? ஒன்பது உயிர்கள் களப்பலியிடப்பட்டது. எதற்காக? யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத்தமிழ்மாநாடுபற்றிய இக்கேள்விகள் இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு புதிரானவையல்ல; இக்கேள்விக்கான விடைகள் இம்மாநாட்டுக்கான பின்னணியுடன் பிணைக்கப்பட்டு இருப்பவை.

—தொடரும்.

## நூல் வெளியீட்டு விழா

ஈழத்தின் முன்னணி எழுத்தாளர் பூநகர் மரியதாஸ் எழுதிய 'அறுவடை' என்னும் புதுக் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இம்மாதம் 24—3—74 யாழ்ப்பாணம் பொதுசன நூலக மேல் மாடியில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழாவினுக்கு காரை சுந்தரம் பிள்ளை தலைமை தாங்க, திரு. தேவன் சந்திரமோகன் ஆகியோர் ஆய்வுரை வழங்குவர். இந் நூல் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளி வரும் முதலாவது புதுக் கவிதைத் தொகுப்பாகும்.




# (7) மாநாடு தொடங்கியது!

சனவரித் திங்கள் 3ம் நாள் சரித்திரத் தலைவன் வீர பாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள்!

கப்பம் கேட்டு வந்த அந்நியனைப் பார்த்து—'வானம் பொழிகிறது; பூமி விளைகிறது; யாரிடம் கேட்கிறாய் கிஸ்தி? திறை? வரி, வட்டி?' என்று கேட்டு தன்மானத்துடன் வீர சிங்கமெனப் பொங்கியெழுந்து கர்ச்சித்து வாள் முனையில் விடுதலைக்காக போரிட்ட வீரமறவன் வீரபாண்டிய கட்டபொம்மன் சனவரி 3ம் நாள் தான் பிறந்தான்!

அத்தகைய விடுதலை வீரன் பிறந்த நாளான சனவரி 3ம் நாளில் தான்—'ஈழம் எங்கள் சொந்த மண்; பல்லாயிர ஆண்டுகளாக எங்கள் முந்தையர் நீரினில் ஆடி, நிலவினில் பாடி, வாழ்ந்திருந்த மண்; எம் தந்தையர் தனியரசு நடாத்திய மண்; தங்கத் தமிழ் மொழி தோன்றிய மண்; தமிழ் கலாசாரம் ஊறிய மண்; அத்தகைய தமிழ் மண்ணின் தலைநகரான யாழ் நகரில் தமிழுக்கு விழா நடத்தாதே — கொழும்பில் தான் அதை நடத்து என்று எமக்கு கட்டளையிடுவதற்கு நீங்கள் யார்? உங்களுக்கு



இலங்கைக் கிளையின் துணைத் தலைவர்களில் ஒருவரும் வரவேற்புக் குழுத் தலைவியுமான திருமதி புனிதம் திருச்செல்வம்

அதற்கு என்ன உரிமையுண்டு எங்கள் மண்ணில் எங்கள் தமிழுக்கு எத்தனை தடைவரினும் அவற்றைப் பொடிப் பொடியாக்கி, விழா நடத்தியே தீருவோம்; அதற்கேற்ற ஆற்றல் எமக்குண்டு' என்று சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு சவால் விட்டபடியே ஆரம்பமாகியது நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு!

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வைராக்கியத்துடன் போரிட்ட வீர பாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாளான சனவரி 3ம் நாள் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானதால் போலும்—சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்ற தார்மீக பலத்தையும் வைராக்கியத்தையும் இறுதியில் அது தமிழ் சமுதாயத்துக்குப் பெற்றுத்தந்து விட்டது!

மானமறவன்— வீரபாண்டிய கட்டப்பொம்மனை எட்டப்பன் வெள்ளையனுக்கு காட்டிக்கொடுத்தது போலவே—அனைத்துலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளிலும் எட்டப்பனைப் போன்று இங்கும் சிலர் தமிழ் சமுதாயத்தை சிங்களப் பொலிஸ் படைக்கு காட்டிக்கொடுத்திடவே செய்தார்கள்! ஆகவே எல்லாவிடயங்களிலும் எத்தனை பொருத்தம் பார்த்தீர்களா?

ஆம்—சனவரி 3ம் நாள் காலை...!

யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் தமிழர் கூட்டம் திரண்டிருந்தது.

நிர்மலமான அந்தக் காலை வேளையில் சிலு சிலுவென்று பனிக்காற்று உடம்பைத் தழுவிச் சென்று—இன்பலாகிரியில் நம்மை மூழ்க வைக்கிறது! அந்தக் காற்றினிலே மிதந்து வரும் நாதஸ்வர ஓசை நம்செவிகளில் வீழ்ந்து விழா உணர்வுகளை நமக்கு ஏற்படுத்துகிறது. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மோகனராகத்தை ஆலாபனம் செய்து கொண்டிருந்தார் நாதஸ்வரக்காரர்!

நேரம் காலை ஒன்பதரை மணி!

வீரசிங்க மண்டப வாசலைச் சென்றடைந்தேன்!

உயர்ந்து கம்பீரமாக நின்ற அந்த மண்டபத்தைக் கண்டபோது என்மனம் ஒரு கணம் பெரு மூச்சு விட்டுக் கொண்டது!

தமிழர்களால், தமிழர்களுக்காக, தமிழர்களின் பணத்தைக் கொண்டு கட்டப்பட்ட அந்த மண்டபத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தக் கூடாதென்று தமிழரல்லாதார் ஆட்சி இரு நாட்கள் முன்பு வரை தடை விதித்திருந்ததே—

அதை எண்ணிப் பார்க்கும் போது சுயமரியாதை படைத்த எந்தத் தமிழனாவது ஆக்ரோஷம் அடையாமல் இருக்கமுடியுமா?

'தேசியமயம்' என்னும் நாட்டுடமைக்கொள்கை — தமிழ் சமுதாயத்தை



செல்வி: பிரெண்டா பெக்.

பொறுத்தவரை எவ்வளவு பாதகமாக முடிந்துள்ளது என்பதற்கு சிங்கள ஆட்சியாளரால் கையேற்கப்பட்ட தமிழர் கட்டிய வீரசிங்க மண்டபத்தில், தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதற்கு தொடக்கத்தில் போடப்பட்டு வந்த தடை தக்கதோர் உதாரணமாகத் திகழுகிறது!

மண்டபத்தின் உள்ளே மெத்த ஆவலுடன் நுழைந்த எனக்கு 'பகீர்' என்றது!

'ஆசனம் காலி இல்லை...... மண்டபத்துள் இடம் இல்லை' என்றார்கள் மண்டப வாசலில் 'கவுண்டரில்' இருந்த சில இளம் பெண்கள்.

நான் எனக்கு வந்திருந்த அழைப்பிதழை எடுத்துக் காட்டினேன்.

ஏதோ கோவைகளைப் புரட்டிப் பார்த்தார்கள்



தமிழ் முனிவர் தனிநாயக அடிகள்.

—பார்த்து விட்டுக் கையை விரித்து விட்டார்கள் அவர்கள்!

என்ன செய்வது என்று புரியாமல் திகைத்து நின்றேன்.

நல்ல வேளையாக அப்போது அவ்வழியே வந்தார்

கோவை-மகேசன்

திருமதி புனிதம் திருச்செல்வம்! மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவி அவர் தான்!

மிகவும் சுறு சுறுப்புடன், அலுப்பு சோர்வின்றி ஓடியாடிச் சமுதாயப் பணியாற்றுபவர் திருமதி திருச்செல்வம். சமுதாயப் பணியை தன்னுடைய கண்ணாகக் கொண்டுள்ள திருமதி திருச்செல்வம் ஆடம்பரமோ, படாடோபமோ இன்றி மிகவும் எளிமையாக காட்சியளித்தார். இலங்கை தமிழ் மகளிர் சமாசத்தின் தலைவியாகவும், அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்ற இலங்கை கிளையின் துணைத் தலைவியாகவும் பணிபுரிபவர்;

ஈழத் தமிழ் சமுதாயத்தின் மீது படர்ந்துள்ள அடிமைத்தனம், சாதிபேதம் போன்ற குருட்டுத்தனங்களைப் போக்கிட அரசியல் ரீதியில் உழைத்து வரும் தமது கணவர் திரு. மு. திருச்செல்வம் அவர்களைப்போலவே, உலக மாந்தரில் குழந்தைகளின் நலன்களைக் கவனிக்கும் உலகப் பேரவையில் இலங்கையின் சார்பில் அங்கத்துவம் வகித்துப் பணிபுரிபவர் திருமதி. திருச்செல்வம்.

மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற முதலாம், இரண்டாம் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்டு, அந்த மாநாடுகள் நடைபெற்ற முறையை நன்கு அவதானித்து வைத்திருந்தவர் திருமதி. திருச்செல்வம்.

முதலிரண்டு மாநாடுகளின் போது ஏற்பட்ட தவறுகளும் குறைகளும் ஈழத்தில் நடைபெறும் 4வது மாநாட்டில் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து கரிசனையுடன் செயற்பட்டவர் திருமதி திருச்செல்வம்.

அத்தகைய நிர்வாகத் திறனும், கனிவும் பண்பும், ஆற்றலும் சுறு சுறுப்பும் மிக்கவரான திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்கள் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவராக பணியாற்றும் போது — அங்கு குறைகள் தலைதூக்க இடமேது?

என்னுடைய நிலையை அவரிடம் கூறி அழைப்பிதழைக் காட்டினேன். அடுத்த நிமிடம், மண்டபத்துள் எனக்கு இடம் கிடைத்தது!

மண்டபத்துள் நான் நுழைந்தபோது நாதஸ்வர கானம் ஒலித்துக்கொண்டேயிருந்தது நாதஸ்வரக் கலைஞர்களான இணுவில் கே. ஆர். சுந்தரமூர்த்தி, கோண்டாவில் வி. கே. பஞ்சமூர்த்தி தவில் வித்துவான்களான கே. ஆர். புண்ணியமூர்த்தி, கே. கிருஷ்ணமூர்த்தி, கே. நித்தியானந்தம் ஆகியோர் இன்னிசை பொழிந்து கொண்டிருந்தனர் மங்கலமும், மகிழ்வும் எங்கும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

மண்டபம் முழுவதும் மக்கள் தலைகள்! மண்டபத்துக்கு வெளியேயும் மக்கள் தலைகள்! எங்கும் எழுச்சிப்பேரலை எழுந்து கொண்டிருக்க காணப்பட்டது!



அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் துணைத் தலைவர் ஜெனர்ட்.

மண்டபத்தின் உள்ளே மதத் தலைவர்கள்—அரசியல் கட்சித் தலைவர்கள், தேசிய பேரவை உறுப்பினர்கள் — அரசியல் சார்பற்ற தமிழ்ப் பிரமுகர்கள், தமிழறிஞர்கள் ஏராளமானோர் முன்வரிசைகளில் குழுமியிருந்தனர்.

தமிழ் மொழியின் உயர்வுக்காகவும், தமிழ் சமுதாயத்தின் விடுதலைக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கும் தமிழர் கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் அங்கு பார்வையாளர் வரிசையிலே காணப்பட்டனர்!

தமிழுக்குப் பெருமை கிடைக்கிற—தமிழுக்கு உலகந் தழுவிய விழா நடைபெறுகிற இடத்தில்—தமிழ் மொழியின் உரிமை வாழ்வுக்காக போராடிவரும் ஒரு இயக்கத்தவர்கள் அகமும் முகமும் மலர்ந்திட அங்கு வந்து அமர்ந்திருந்ததில் வியப்பேது?

அரசியல் கடந்த இந்தத் தமிழுணர்வுக்குத் தான்— தமிழ்ப்பற்றுக்குத் தான்— 'அரசியல்' என்று முலாம் பூசுகிறார்கள் தமிழுக்கு கொள்ளிவைத்துவரும் ஒரு சில புல்லுருவிகள்!

அத்தகைய தமிழ்ப்பகைவர்கள் — தமிழ்துரோகிகள் —யாரும் அந்த மண்டபத்தில் காணப்படாததால்,



அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் இணைச் செயலாளர்களில் ஒருவரான அறிஞர் ஜேம்ஸ் இரத்தினம்.

அது புனிதமடைந்து காணப்பட்டது.

மாநாட்டு மேடைக்கு 'ஈழத்துப் பூதன்தேவனார் அரங்கு' என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது மிகவும் பொருத்தமாக இருந்தது.

தமிழர்கள் இந்நாட்டில் தன்மானத்துடன், தன்யரசோச்சி — தமிழ் வளர்த்த காலை, இங்கிருந்து தமிழ் நாடு சென்று சங்கத்தில் இருந்து தமிழ் ஆய்ந்த புறநானூற்றுப் புலவன் அல்லவா பூதன்தேவனார்!

மாநாட்டு மேடையின் பின்னணியில் 'நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணம் — இலங்கை' என்று எழுதப்பட்ட [illegible] பெரிய பதாகையொன்றும், அதன் கீழ் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் புறநானூற்று வரியைக்கொண்ட வட்ட வடிவமான சின்னமும் காணப்பட்டது!

இவற்றையெல்லாம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த நான் — அங்கு உட்கார்ந்திருந்த அறிஞர்களும் பிரமுகர்களும் பரபரப்புடன் திடீரென எழுந்து நிற்பதை அவதானித்தேன். அவர்கள் முகங்களில் ஒரு வித மரியாதையும் பயபக்தியும் இழையோடிக்கொண்டிருந்தது.

என்னவென்றறிய திரும்பிப் பார்த்த போதுதான் விஷயம் புரிந்தது!

முப்பத்தைந்து இலட்சம் ஈழத்தமிழர்களின் தலைவரும், தமிழ் சமுதாயத்தின் விடுதலை உணர்வுக்கு வித்திட்டவரும், தமிழ் ஈழத்

(9-ம் பக்கம் பார்க்க)

## எண்ணம்

# ஒரு மதத்துக்கு ஒரு நீதி!

தேவாரப் பாடல்பெற்றதும் — வரலாற்றுப் புகழ் கொண்டதும் உலகெங்கும் வாழுகின்ற கோடிக்கணக்கான இந்துக்களின் முக்கிய தலமென்று கருதப்படுவதுமான திருக்கோணேசராலயத்தையும் அது அமைந்துள்ளகோணேசர் கோட்டையையும் இந்துக்களின் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும்படி, இந்நாட்டு இந்துக்கள் கட்சி அரசியல் வேறுபாடுகள் எதுவுமின்றி நீண்ட பல காலமாக கோரிக்கை விடுத்து வருகிறார்கள்!

இந்துக்களின் ஏகோபித்த இக்கோரிக்கை சிங்கள ஆட்சியாளர்களின் செவிகளில் துளியும் விழுவதாக இல்லை!

ஆனால் கோணேசர் ஆலயத்துக்கு சற்றுத் தூரத்தில் உள்ள 'சேருவாவில' எனுமிடத்திலுள்ள பௌத்த விகாரைக்கு குடியரசுத் தலைவரும், பிரதமரும், கலாசார அமைச்சரும் ஏனையோரும் 'படை'யெடுத்துச் சென்றார்கள்!

மேற்படி விகாரையின் திருப்பணிக்கு அரசு வாரி வழங்குகிறது! பல்லாயிரம் ரூபா செலவில் விகாரை புனருத்தாரணம் செய்யப்படுகிறது!

அது மட்டுமல்ல—மேற்படி விகாரைக்கு சென்று வருவதற்காக பௌத்தர்களின் நலன் கருதி 'சேருவாவில'வுக்கு புதிதாக புகையிரத சேவையையும் தொடக்கவிருக்கிறது!

பௌத்தயாத்திரீகர்களின் நலன் கருதியே இந்த ஏற்பாடுகள் யாவும் செய்யப்படுகிறதா அல்லது திருகோணமலையை சிங்கள மயமாக்கும் சூழ்ச்சித் திட்டமா இது என்று தமிழ் மக்கள் ஐயத்துடன் கேட்க ஆரம்பித்துள்ளனர்.

இதோ மற்றோர் 'சாம்பிள்'!

கொழும்பிலுள்ள சைவ மக்களின் நலன் கருதி—சைவ மக்களின் பணத்தைக் கொண்டு—சைவ மக்களால் கும்பனித் தெருவில் கட்டப்பட்டது ஒரு சைவ கலாசார மண்டபம்!

கும்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், இந்துக்களிடம் சென்று சிறுகச் சிறுகப் பணம் சேர்த்து—மடிப்பிச்சையெடுத்து — இந்த கலாசார மண்டபத்தை கட்டி முடித்தது!

சைவ மக்கள் தம் சொந்தப்பணத்தில் இந்தக் கட்டிடத்தை கட்டி முடித்ததும்—சொல்லாமல் கொள்ளாமல் திடுதிப்பென—அம் மண்டபத்தை பறிமுதல் செய்தது சிங்கள ஆட்சி!

பறித்த அந்தக் கட்டிடத்தை இப்போது பௌத்த பிக்கு ஒருவருக்கு கையளித்திட திரைமறைவு சதி முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஆனால்—இந்துக்களே பெரும்பான்மையினராக வாழும் யாழ்ப்பாணத்தில—பௌத்தர்களுக்காக யாத்திரீக விடுதியொன்றை பல லட்சம் ரூபா செலவில் மக்களின் வரிப் பணத்தில் ஒரு பகுதியையும் கொட்டி கட்டிக்கொடுக்கவிருக்கிறது கலாசார அமைச்சு!

கொழும்பில் இந்துக்கள் தம் சொந்தச் செலவில் கட்டி முடித்த கட்டிடத்தையும் பறித்து பௌத்தர்களுக்கு கொடுக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அரசின் செலவிலேயே பல இலட்ச ரூபா செலவில் பௌத்த யாத்திரீகர்களுக்கென்று விடுதி கட்டுகிறார்கள்.

இவ்வாறு இந்த அரசாங்கம் மதப்பாகுபாடும் வேறுபாடும் காட்டி - ஒரு மதத்துக்கு ஒரு நீதியென்ற முறையிற் செயற்பட்டுவருகிறது என்பதற்கு இன்னும் ஏராளமான உதாரணங்களை நம்மால் காட்டமுடியும்!

ஒரு கண்ணில் வெண்ணெய்யும் மறு கண்ணில் சுண்ணும்பும் தடவிக்கொண்டு போலித்தனமான சோசலிசம் பேசி, சோசலிசத்தின் மானத்தையே இவர்கள் வாங்கிவருகிறார்கள்!

ஒரு மதத்துக்கு முதலிடம் கொடுப்பதும், அந்த மதத்தின் வளர்ச்சிக்கு ஏனைய மதத்தவர்களின் வரிப் பணத்தைக் கொட்டிக்கொடுப்பதும் எந்தவகை சோசலிசம் என்பதை சோசலிசத்தைக் கரைத்துக்குடித்ததாக கூறும் ஆட்சியிலுள்ள இரட்டைக் கலாநிதிகள் எடுத்து விளக்குவார்களா?

பௌத்தமதம் தாராளமாகவே வளரட்டும்! பௌத்த சங்கங்கள் அதற்கு பாடுபடட்டும். அதுபற்றி நாம் எதுவும் சொல்வதற்கில்லை!

ஏனெனில்—மதவெறி பிடித்தவர்கள் நாம் அல்ல! ஆனால் அரசு திட்டமிட்டு, ஏனைய மதங்களுக்கு இல்லாத உரிமைகளையும் சலுகைகளையும் பௌத்த மதத்துக்கு மட்டும் அளித்து, இந்நாட்டை ஓர் பௌத்த சிங்கள நாடாக்க எடுக்கும் முயற்சிகளை ஏனைய மதத்தவர்கள் பார்த்துக்கொண்டு பொறுத்திருக்கமுடியாது!

இந்நாட்டிலுள்ள சிறுபான்மை மதங்களான இந்து—கிறிஸ்தவ—இஸ்லாமிய—கத்தோலிக்க மதத்தலைவர்களும், மத நிறுவனங்களும், இது விஷயத்தில் ஒன்றுபட்டு—தங்கள் மத உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள ஏதாவது செய்தேயாகவேண்டும்!

# சட்டக் கல்லூரியில் நடந்தது என்ன? அவதாரம் அபியுக்தனுக்கு ஆப்பு!

சென்ற 13ந் திகதித் தினகரனில் 'படித்ததும் கேட்டதும்' பகுதியில் 'அபியுக்தன்' என்கிற அவதாரம், சட்டக் கல்லூரித் தமிழ் மன்ற விவகாரம் பற்றி பொய்யும் புனைசுருட்டுமாக செய்தி விமர்சித்திருக்கிறது. அதாவது, சிங்கள வாக்குப் பலத்தினால் தமிழ் மன்றத்துக்கு தலைமைதாங்க வந்துவிட்ட தான்தோன்றியும், அமைச்சர் குமாரசூரியரின் எடுபிடியுமான விசித்திரன், ஆங்கிலத்தில் நடைபெற்ற தமிழ்மன்ற நிகழ்ச்சிகளின் போது, ஆங்கிலத்தில் பேசுமாறு கேட்கப்பட்டும், தனது தாய்மொழிப்பற்றினால் தமிழிலேயே உரையாற்றுவேன் எனப் பிடிவாதமாக உரையாற்றினார் என்று. உடுவில் தொகுதியின் குட்டித்துரோகிக்கு சான்றிதழ் வழங்கியுள்ளது?

இதையிட்டு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டிய கடமை எமக்குண்டு.

சட்டக்கல்லூரித் தமிழ் மன்ற அமைப்பு விதிகளின் படி, அமைப்பு விதிகள் சம்பந்தப்பட்ட விடயம் எதுவும் ஆங்கிலத்தில் விவாதிக்கப்படலாம். இதன்படியே, மன்றத் தேர்தல் நியமனத்தின்போது, வேட்பாளர் ஒருவரின் நியமனப் பத்திரத்தை ஆட்சேபித்த உறுப்பினர் ஒருவர், ஆங்கிலத்தில் பேசத் தலைப்பட்டார். தலைவர் தடுத்தும் (அவர் ஏன் தடுத்தார் என்பது கீழே விளங்கும்) சபையோரின் வேண்டுகோளின்படி, குறிப்பிட்ட உறுப்பினரும் அவரைத் தொடர்ந்து வேறுசிலரும் ஆங்கிலத்தில் உரையாற்றினார்கள். குறிப்பிட்ட விவாதத்தின் முடிவில் விசித்திரன் தமிழில் பதிலளிக்கத் தொடங்கியபோது, விவாதம் ஆங்கிலத்தில் நிகழ்ந்தால் பதிலையும் ஆங்கிலத்தில் அளிக்குமாறு ஒரு உறுப்பினர் கேட்டார்:

'எனது தாய்மொழியிலேயே பேச விரும்புகிறேன்'—விசித்திரனின் வழக்கமான சவடால் பதிலால வந்தது:

'உமது தாய்மொழிப் பற்றுத்தான் நாடறிந்ததாயிற்றே' என வேறொரு உறுப்பினர் வீசிய கிண்டலை சபையின் சிரிப்பொலி தொடர்ந்தது. இருந்தும் அவர் தொடர்ந்து தமிழிலேயே பதிலளித்தார்.

சட்டக் கல்லூரியில் தமிழின் வாழ்வுக்காக ஜீவமரணப் போராட்டம் நடாத்திக்கொண்டிருக்கும் இன உணர்ச்சிமிக்க இளைஞர்கள் மன்றத் தலைவரை ஆங்கிலத்தில் பேசுமாறு கேட்டது எதற்காக?

'விளையாட்டு' அரசியல்வாதி விசித்திரன் மன்றத்தில் தமிழில் பேசுவது தாய்மொழிப் பற்றினால் அல்ல, அவரது அறிவின் பற்றாக்குறையினால் என்பதை அப்பட்டமாக அனைவரும் அறிவர்! இவரின் மூன்றாண்டு கால சட்டக்கல்லூரி வாழ்க்கையில் எந்தவொருசந்தர்ப்பத்திலாவது அவர் மூன்று விநாடிகூட ஆங்கிலத்தில் உரையாற்றியது கிடையாது! அமைச்சர் குமாரசூரியரின் அரசியல் ஞானப்பாலை தினம்தினம் உண்ணும் இந்த 'விளையாட்டு' அரசியல் வாதி, ஞானசம்பந்தர் பாங்கில் அழுகுவாய் திறந்து தம் ஆங்கிலக் கையிருப்பை அனைவரையும் அறிய வெளிக்காட்டவேண்டும் என்ற நல்லெண்ணமே, குறிப்பிட்ட உறுப்பினர் அவரை ஆங்கிலத்தில் பேசக்கேட்டதற்கு காரணமாகும்.

இந்த இடத்தில் அவதாரம் அபியுக்தனைப் பற்றியும் சில வார்த்தைகள்.

விலாசமில்லாமல் எங்கெங்கோ வெல்லாம் இருந்த நீ, 70 ஆம் ஆண்டுத் தேர்தல் தந்த திடீர் அதிர்ஷ்டத்தில் இலங்கை வானொலியிலும் ஏரிக்கரை ஏடுகளிலும் உன் 'ஸ்ரண்ட்டு'களை காட்டினாய் இடையில் உன் 'கொம்றேட்'களே உன்னைக் கூண்டுக்குள் தள்ளினார்கள்!

திரும்பி வந்ததும் திருந்துவாய் என எதிர்பார்த்தோம். ஆனால் வந்ததுதான் வந்தாய் உன் சொந்த முகத்தைக் காட்ட உனக்கு வெட்கம் போலும்! அபியுக்தன் என்றொரு அவதாரம் வேறு! ஆயினும், உன் அறுவை வேலைகளை நீவிட்டபாடில்லை. தமிழாராய்ச்சி மகாநாடு கொழும்பில் நடைபெற வேண்டும் என ''டெயிலி நியூசில்'' உன் கோணல் ஆங்கிலத்தில் கிறுக்கித் தீர்த்தாய். விலாசமும் விளம்பரமும் தேடி அலையும் நீ, பிடிப்பதைப் புளியங்கொம்பாக பிடிக்கக் கூடாதா? போயும் போயும் விளையாட்டு அரசியல் நடாத்தும் விசித்திரனா உனக்கு கிடைத்தார்?

சான்றோரையும் ஆன்றோரையும் சந்தித்துப் பழகிய சட்டக்கல்லூரி மேடையை உன் போன்றவர்களும் கடந்த ஆண்டில் எட்டிப் பார்க்க முடிந்ததென்றால், காரணம் உன் மேதாவிலாசமல்ல; குட்டித்துரோகியின் செல்வாக்கு, உன்னைப் போன்றவர்களின் மட்டத்துக்கே எட்டக்கூடியதாக இருப்பதுதான்.

இறுதியாக ஒன்று! அப்பனே! அபியுக்தா! எழுது! எழுது! நன்றாக எழுது! பொய்யையும் புரட்டையும் மட்டுமல்ல, சாக்கடை நீரையும் உன் பேனாவுக்குள் நிரப்பி எழுது! நாங்கள் நாற்றம் தாங்காது மூக்கைப் பிடித்துக் கொள்கிறோம்.

—சட்ட மாணவர்கள்;

# தமிழ் எழுத்தாளர் கடமை!

கே:- நமது தமிழ் பேராசிரியர்கள் பலர் உலக இலக்கியங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை உணராமல் தமிழ்—தமிழன்—தமிழ் நாடு என்ற குறுகிய எல்லைக்குள் சிறைப்பட்டு வழிபாட்டுக் கூட்டம் போல் வாழ்கின்றார்கள் என்று வருந்தும் இளைய தலைமுறைக்கு நீங்கள் வழங்கும் செய்தி என்ன?

ப:- அவ்வழிபாட்டுக் கூட்டத்தில் நானும் ஒருவன் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். தமிழர் எல்லோருமே விரிந்த நோக்கத்தோடு விரிந்த உலக எல்லைக்குச்சென்று விட்டால் தமிழ்ச்சொத்துக்களை யார் காப்பது? ஒரு சிலராவது அன்னையும் பாட்டியும் போல வீட்டைக் காத்துக்கொண்டு கிடக்க வேண்டும். அப்படிக் கிடப்பவர்கள் தாம் அப்பேராசிரியர்கள். உலக மாறுதல்களை வரவர உணர்ந்துதான் அப்படி இருக்கிறார்கள். குறுகிய எல்லை என்று பிறர் குத்திக் காட்டுவதற்காக தமிழ்ச் செல்வங்களை விட்டுப்போக மாட்டார்கள். அதனைத் தியாகம் என்று கருதினாலும் சரி, சிறை என்று கருதினாலும் சரி அடிமை என்று கருதினாலும் சரி, அவர்கள் கடமையென்று கருதுகிறார்கள். தமிழ்பேராசிரியர்கள் கிடக்க, எந்தமொழி இலக்கிய பேராசிரியர்கள் பிறமொழியும், பிற இனமும், பிற நாடும் பற்றியெழுதுகிறார்களோ?

'விரிந்த எல்லையிற் செல்வதாக எண்ணிக்கொள்ளும் எழுத்தாளர் தம் எழுத்துக்கள் எப்படியுள்ளன? தமிழ் நாடு என்ற அளவிற்கூட இல்லாமல்—தாங்கள் வாழும் நகரங்களையும் நகரப்போக்குகளையுமே சுற்றி வட்டமிடுகின்றன. அவர்கள் எல்லார்க்கும் புரியும் இயன்மொழியில் எழுதாமல் ஒரு சாதி பேசும் வட்டார மொழியில் அச்சாதிப் பழக்கவழக்கங்களையே சுற்றிச் சுற்றி எழுதுகின்றனர்.

'அனுபவத்தை எழுதுங்கள் குறுகிய எல்லை, விரிந்த எல்லை என்ற தொடர்களுக்கு மயங்கி ஆளாக வேண்டா, பல திசைகளிலிருந்து கண்டவற்றை செரிமானமின்றி வாங்கிக்கொள்ள முந்தாமல் தமிழ் திசையிலிருந்து ஞாலத்திற்கு என்ன கொடுக்கலாம் என்று கடமை வழிச் சிந்தியுங்கள்! தமிழ் நாடு உலகின் ஒரு பகுதி. தமிழினம் உலக இனங்களுள் ஒன்று. தமிழ் உலகமொழிகளுள் ஒன்று. ஆதலின், தமிழ் நாடு, தமிழினம், தமிழ் பற்றிய சிந்தனைகளும் உலகச் சிந்தனைகளே!

அடிப்படையை என்றும் விட்டுக்கொடுக்காது போற்றி அனுபவத்தைப் பெருக்கிக்கொண்டு, அதற்கேற்பச் சிந்தனை எழுத்தாளர்களாக நாம் வாழவேண்டும்.

—'தீபம்' பெப்ரவரி இதழ் 'இலக்கிய சந்திப்பு' பகுதியில் அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் சுப. மாணிக்கம் அளித்த பேட்டி!

# அட்டனில் தனிச் சிங்களத் திணிப்பு! மலையகத் தமிழர்கள் பரிதவிப்பு! மலையக இளைஞர் முன்னணி ஓடி ஒழிப்பு!

ஆட்டைக் கடிக்கும் போது பார்த்துக் கொண்டிருக்கலாம்; மாட்டைக் கடிக்கும் போது பார்த்துக் கொண்டிருக்கலாம். மனிதனைக் கடிக்கும் போது கை கட்டி வாய்பொத்தி பற்றற்ற துறவியாக இருந்தால் ஒரு மனிதனல்ல பல மனிதர்களும், குடும்பமும், இனமும் படிப்படியாக அழிந்துவிடும்.

''நாம் தமிழ் மக்களுக்கு விரோதிகளல்ல; அவர்களின் ஆப்த நண்பர்களே; நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் தான் மலையகத் தமிழருக்கு வேலை வாய்ப்பளித்துள்ளோம். பெரும்பெரும் பதவிகளைக் கொடுத்திருக்கிறோம்'' என்று அடிக்கடி எடுத்துக் காட்டுகிறது இன்றைய அரசு. ஆனால் அணைக்கிறது போல அணைத்து ஆளின் முதுகில் குத்தி உயிர் போக்கும் கொள்கையைத்தான் இன்றைய அரசு தமிழரைப் பொறுத்தவில் கையாண்டு வருகின்றது.

## உலக அதிசயம்

மலையகத்தை இன்றைய அரசு முழுப்பட்டினிபோட்டு சாகடித்து வருவதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது; மாதச் சம்பளம் கோரி பெற்ற மலையக மக்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க அரசு வரிந்து கட்டிக் கொண்டு கரும மாற்றுவதை அரசாங்க வால் பிடி மலையகத் தலைவர்கள் அறிவார்கள். அறிந்தும் அறியாதவர்களாக கண்ணிருந்தும் குருடராக, செவியிருந்தும் கேளாதவராக, ஐம்புலன்களிருந்தும் இவற்றை உணராதவர்களாக இன்று அரசாங்கத் தரகர்கள் மக்களிடையே நடமாடுகிறார்கள். அதுதான் இன்று எனக்கு உலக அதிசயமாக இருக்கின்றது.

மலையக இளைஞர் முன்னணி அமைத்தபின் அதன் முக்கிய உறுப்பினர்கள் தங்களுக்கு வேண்டியவற்றைச் சாதித்து இன்று முன்னணியை பின்னணிக்குத் தள்ளி வைத்து வருகிறார்கள் பிரதேச உணர்வை வெகுவாக மலையகத்தில் பரப்பியவர்கள் இவர்கள் என்பதை மலையகம் நன்கறியும். இன்றைய ஆட்சி அமைக்கப்பட்டபின் — அரசாங்கத்தின் ஆதரவாளர்களென்று தம்மைக் காட்டிக் கொண்டு பதவி பெற்றதை விட இந்த முன்னணி இதுவரை சாதித்ததென்ன? இக்கேள்விக்கு அவர்களால் விடை பகர முடியாது.

## கழுத்தறுப்பு

மலையக முன்னணியின் முக்கிய 'பிரமுகர்'களுக்கும் கற்றனுக்கும் இன்று மிகமிக தொடர்பு உண்டு. இவர்கள் அனைவரும் சங்கமமாகிச் சமுத்திரமாகப் பிரவாகித்தோடுவதும் இன்று கற்றனில் தான். இதே கற்றனில் தான் இன்று அரசாங்கம் கழுத்தறுப்புச் செய்து வருகின்றது. மலையக முன்னணித் தலைவர்கள் தோன்றிய மண்ணில் இன்று சிங்களத் திணிப்பு அப்பலோ வேகத்தில் சென்று கொண்டிருக்கின்றது. இவர்கள் 'கொர்' 'கொர்' என்று குறட்டை விட்டுத் தூங்குகிறார்கள்.

கற்றனில் உள்ள ஒரே ஒரு மகளிர் கல்லூரியின் தலைமைப் பீடத்தை ஆரம்பகாலம் தொட்டு தமிழ் பெண் மணிகளே அலங்கரித்துவந்தனர். இன்றைய மக்களரசு வந்தபின் தமிழ் அதிபரின் தலைமைப்பீடம் சிங்கள அதிபருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டது: அந்த தாரை வார்த்துக் கொடுத்த சடங்கைக் கண்ட தமிழ் மக்கள் உள்ளம் கொதித்து, நெஞ்சம் வெதும்பி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எதிர்ப்பு வெறும் வெற்று வேட்டாகியது; இன்று அந்த இடத்தைச் சிங்கள அதிபரே அலங்கரித்து வருகிறார்: இதன் பலன் உடனடியாகப் பிரதிபலிக்கவில்லை; சில

### 'அப்பலோ'

ஆண்டுகளின் பின் இன்று தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புப் படிப்பை முடித்து வந்து ஆறும் வகுப்பில் படிக்க இருந்த 70 மாணவியர் இடமில்லை என்று துரத்தி அடிக்கப்பட்டிருக்கின்றனர்; ஆண்டாண்டு காலமாக அவர்களுக்கிருந்த ஒரு உரிமைக்கு அங்கு உலை வைக்கப்பட்டிருக்கின்றது;

கற்றனில் மிகவும் பிரபலமான கல்லூரி புனிதயோன் பொஸ்கோ கல்லூரி. இக்கல்லூரி பதியப்பட்ட தமிழ் மகாவித்தியாலயம். ஆனால் இங்கு ஒரு சிங்கள அதிபர் நியமிக்கப்பட்டு பல வித எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பணியாற்றி வருகின்றார் தமிழ் மக்களின் ஜீவாதார உரிமைகள் இந்த அரசால் பறிக்கப்பட்டு வருகின்றதென்பதற்கு இந்த உதாரணத்தைவிட வேறு ஒரு உதாரணம் வேண்டியதில்லை;

இப்படியான ஒரு நியமனத்தைப் பின்னர் வாபஸ் பெறலாம். ஆனால் இந்த அரசு துணிந்து இப்படியொரு துரோகத்தைத் தமிழ்மக்களுக்குச் செய்ததே இதை எண்ணிப் பார்க்கத்தான் நெஞ்சம் வெதும்பிச் சாம்புகிறது. இமயமே இடித்து சுக்கு நூறுகிய உணர்வு பிறக்கிறது.

இந்த நேரத்தில் மலையக முன்னணி மூலையில் முடங்கிக் கிடக்கிறது. ஒரு எதிர்ப்புக் குரலைத் தானும் எழுப்பியதில்லை, இந்த நியமனத்தின் பின் இம்முன்னணியின் பொதுச்செயலாளர் இக்கல்லூரி நிர்வாகத்திலுள்ள கல்வித்திணைக்களத்திற்குப் பிரதம கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் வந்து பதவி ஏற்றதும் எனக்கேன் இந்த வீண் வம்பு என்று எண்ணியோ என்னவோ விடுமுறையில் சென்றுவிட்டார். அவர் விடுமுறையில் சென்று பதவியையும் அதனால் பெறும் கொழுத்த பணத்தையும் உதறி எறிந்து ராஜினாமாச் செய்திருப்பின் மலையக மக்களின் மதிப்பையும் பாராட்டையும் பெற்றிருப்பார். அவர் பிரச்சினை முடியும் வரை விடுமுறையில் நிற்கிறார்; விடுமுறையில் நிற்கிறாரென்று கூறுவதைவிட ஒழித்தோடிப்பதுங்கி வாழ்கிறார் என்றால் அது மிகைபடக் கூறியதாகாது.

பதவி பெரிதா? பணம் பெரிதா! உரிமை பெரிதா! மானம் பெரிதா? இதனைத்தான் மலையகத் தமிழ் மக்கள் தம்முள் இன்று கேட்டு வருகிறார்கள்.

# ஏகாம்பரத்தை நினைவு கூருவோம்!

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்தோன்றலிற் தோன்றாமை நன்று'' என்ற தெய்வப்புலவராம் திருவள்ளுவரின் திருவாக்கிற்கமைய தோன்றி புகழொடு வாழ்ந்து நின்ற பெரியார் தான் காலம் சென்ற மூதூர் தொகுதியின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரும், திருகோணமலை நகராண்மைக் கழகத் தலைவருமான அமரர் தம்பையா ஏகாம்பரம் ஜே. பி., யூ. எம். அவர்களாவர்.

உலகத்தில் எத்தனையோ கோடி மனித உயிர்கள் பிறந்து இறந்த செய்தியினை நாம் கேட்டிருப்போம். தவிர அவர்கள் அனைவரையும் நினைவில் வைத்திருப்பதுமில்லை; அன்றேல் நினைக்கத்தானும் முடிவதில்லை, என்று கூடக் கூறிவிடலாம். ஆனால் ஒருமனிதன் பிறந்தான் அவன் தனக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்து தன்மொழிக்கும் இனத்திற்கும் இறுதிவரை தொண்டாற்றி நின்றான் என்றால் எவருமே மறக்க முடியாது: அப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு சில பெரியார்களில் தமிழ் பேசும் மக்கள் மனதில் இடம்பெற்ற பெரியார் அமரர் ஏகாம்பரம்.

வாய் திறந்து பேசுவது தொடக்கம் கோல்கொண்டு எழுதுவது வரை தன் தாய் மொழியாம் தமிழ் மொழிக்கே அவர் முதலிடம் கொடுத்தார். என்றால் அவரின் தமிழ் பற்றினை நாம் என்னென்றுகூறுவது! அமரர் ஏகாம்பரம் அவர்கள் திருகோணமலை நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருந்த காலத்தில் கழகத்திற்குரித்தான பொது நூலகத்தில் ஏராளமான தமிழ் நூல்கள் தருவித்து அங்கும் தமிழ் மணம் கமழச் செய்தார்.

நகராண்மைக் கழகத்தின் எல்லாச் செயல்களையுமே தமிழ்மொழியில் கையாண்ட பெருமை அமரர் ஏகாம்பரம் அவர்களையே சாரும். அதுமட்டுமல்ல ''எப்பொருளிலும் மெய்ப்பொருள் காண வேண்டும்'' என்ற சிறந்த நல்நோக்கோடு கட்சி பேதம் கருதாது பலவிதமான அரசியல் கருத்துக்களைத் தாங்கி நிற்கும் எந்த ஏடாகினும் சரி, எந்தச் சஞ்சிகை யாயினும் சரி எந்தப் பத்திரிகை யாயினும் சரி எல்லாவற்றையுமே நூலகத்தில் இடம்பெறச் செய்து எல்லோராலும் பாராட்டப் பெற்றார்.

அமரர் ஏகாம்பரம் அவர்கள் திருகோணமலையிலேயே பிறந்தவர்: அங்கேயுள்ள அர்ச்சூசையப்பர் கல்லூரியிலே கல்விகற்றார்: அத்தோடு நில்லாமல் தான் கல்வி பயின்ற பாடசாலையிலேயே அதிக காலம் ஆசிரியருமாக கடமையாற்றினார்: மேலும் ஏழைப் பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட முறையிலும் கல்வி புகட்டினார்; பாடசாலை மாணவர் முன்னேற்றத்திற்கு ஒற்றுபட்டுழைத்தார். அதன்பின் அவர் தமிழ் மொழியினையும் தமிழ் இனத்தினையும் தாழவிடாது தலை நிமிர்த்த வேண்டி விருப்பம் கொண்டார். ஆகவே தான் ஆசிரியர் பணியைக் கைவிட்டு அரசியலில் குதித்தார்.

அமரர் ஏகாம்பரம் அவர்கள் ஆழ்ந்த பக்திமானும் கூட. கோவில்களில் திருப்பணிக்கு அயராது உழைத்தார். திருக்கோணேஸ்வரத்தின் புதிய திருக்கோவிலைக் கட்டுவித்த பெருமை அமரர் ஏகாம்பரம் அவர்களையே சாரும். கோவில் திருவிழாக் காலங்களில் தெருக்கள் தோறும் தண்ணீர் ஊற்றி வெய்யிலின் வெப்பம் மக்களைத் தாக்காது காக்கவைப்பார். இவ்வாறு பொது மக்களைக்கூட சிறிதேனும் துன்பப்பட விடமாட்டார். ஆகவேதான் பொதுமக்கள் எல்லோராலும் இவர் ஓர் தெய்வப்பிறவி என அழைக்கப்பட்டார். வாழ்க அமரர் புகழ் வளர்க அவர் தமிழ்த் தொண்டு!

மூதூர்- தமிழ் மாறன்



மூதூர் முதல்வராகவும் தமிழரசுக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவும் பணியாற்றிய திரு. ஏகாம்பரம் அவர்களின் அமரத்துவ தினம் 22.3.1974 ஆகும். அதையொட்டி இக்கட்டுரை இங்கு இடம்பெற்றுள்ளது.

## நிறுத்து

—பூவை—ஜனார்த்தனன்

ஏ...
தமிழ் சமூகமே
வாழ்கிறாய் ஒரு வாழ்க்கை
டடி மம்மி சொல்லி
''அப்பே ஆண்டுவ''வுக்கு
சலாம் போட்டு
வெறும் சுயநலக் காரனாய்
சிலகாலம் வாழ்ந்து—
அனுபவித்து...மடியலாம்
ஆனால் — நாளை
வருகின்ற சந்ததிகள்
எம்மைத் தூற்றுகின்றபோது
நீ யிருக்க மாட்டாய்
அவர்கள்—
நலமுடன் வாழ — இன்றே
அடிமைப் பாதையினை நிறுத்து

## போராட்டம் யாருக்காக!

—ரவி

பாடுபட்டு, பாடுபட்டு
பலம் யாவும் இழந்து
வீடு ஒன்று கட்டுகிறேன்
மாடுபோல் உழைத்து
ஓடாகிப் போய்விட்டேன்;
இந்த உழைப்பினாலேயே
நான் இறந்துவிடப் போகிறேன்!
என்னுடைய மக்கள்
பயமின்றி கூச்சமின்றி
அந்த வீட்டில்
அமர்ந்திருக்கையில்
என் கண்களில்
ஆனந்தநீர் சொரிகிறது.

## முற்போக்குவாதி

இனவெறியைக்
கக்கிடுவார்
இலஞ்சம் நிறைய
வாங்கிடுவார்
கட்சிவிட்டுக் கட்சி
மாறிடுவார்
கண்டபடியுளறித்
திரிந்திடுவார்
மேடைதன்னில்
முழங்குவார்
வீட்டினிலே
மறந்திடுவார்
உத்தியோகம் என்றால்
என் கட்சிக் கிளை
அமைத்திடு
என்பார்
யார் இவர் என்று
கேளாதீர்
இவர்தான்
முற்போக்குவாதியாம்

-நெடுங்கேணி நவம்

## ஒரு பட்டினிக் குரல்

—சிவலிங்கம்—

எங்க குடும்பம் பெரிசு ஐயா!
'என்னெம்' பெரு மானே
உங்க உணவு வெட்டு வந்து
உடல் துடிக்கிற தையா!

அஞ்சி யாக வேனும் ஒரு
வேலை காண வேணும்
பஞ்சி யோடி றற்குப் பல
நாடு பிச்சை போடும்!

கட்டுப் பாடு செய்யச் செய்யக்
கரை கடக்குது கஷ்டம்
வெட்டிப் பேச்சும் வீம்பு மாகப்
பேர் அவையில் குதர்க்கம்!

ஏழு ரூபாய் அரிசி இங்கே
ஏழை நாங்கள் ஐயா!
பாழும் வயிறு துடித்துச் சாகுது
பணத் துக்கென்ன செய்ய!

காலை தோறும் உணவு தேடிக்
கால் கடுக்குது நின்று
பாலர் சோறு கேட்கும் போது
பரி தவிக்குது நெஞ்சு!

மூலை முடுக் கெல்லாம் தேடி
உணவுக் காகக் காசு
தாலி வாளி எல்லாம் வைத்துத்
தடவிக் கொட்டி யாச்சு

மாடு ஆடு கோழி சப்பி
வாழ்ந்த தில்லை நாங்கள்
வீடு தோறும் வாடிச் சருகு
போலச் சோரு துடல்கள்!

சேலை துணி நகை நட்டுகள்
'சிகரெற்' கூட வேண்டாம்
நாளுக் கொரு வேளைச் சோறு
நாம் புசித்திடத் தாரும்!

ஆளு பவர் கடமை தலை
யான திது அன்றோ!
ஆளுக் கொரு விதி செலுத்தும்
அரசு நின்ற தன்றோ!

பொரு ளியலின் ஞானம் கொண்டு
போன தேர்தல் போது
தருவ தாகச் சொன்ன தென்ன?
தந்து விட்ட தேது!

---

## தமிழன்!

—உதயன்

எங்கள் மொழி சிதைக்கப்பட்டு,
இனம் நசுக்கப்பட்டு,
உரிமை மறுக்கப்படும் வேளையிலே
சலுகைகளெனும் எலும்பிற்காக
காத்து நின்று, பாய்ந்தோடி
நாய் போல் வாழும் நானோர்
தமிழன்!

---

## இதய தாகம்

— பூநகர் மரியதாஸ் —

ஏ!... ஈழத் தமிழ் நாடே...
என்னருமைத் தாயகமே...!
அடிமைத் தளையில் வாழும்,
உனது உடலில்...,
நான் வாழாது —
வெட்கித் தலைகுனிகின்றேன்
ஏனோ...! — உனது
வண் டமர்ந்து தேன்பருகும்
சோலைகள்
பேய் கனிதரும்—
காய் வெட்டி மரமானதோ!
என் இதயத்தால்...
மரணசிகமாக கூறுகிறேன் —
எனது வாழ்வு மட்டுமல்ல ...
எனது மரணத்தின் பின்னும்—
எனது உடல்
சுதந்தர தமிழ் மண்ணிலே ...
இரண்டற கலக்கவேண்டும்
இது என்னுசையில்லை —
பல்இலட்சத்தினரின் இதயதாகம்.

---

# மன்னார் தேர்தல் முடிவும் தலைவர்களின் கடமையும்!

கடந்த 18 ஆண்டுகளாக தமிழ் அரசுக் கட்சியின் பிடியில் இருந்து வந்த மன்னார்த் தொகுதியில் இம்முறை நடைபெற்ற உபதேர்தலில் 75 வாக்குகளால் ஐ. தே. கட்சியிடம் தமிழ் அரசு தோல்வி கண்டதுபற்றி எதிரணியிலுள்ள தலைவர்கள் பலரும் தமிழ் இனத்துக்குள்ளேயே வெஞ்சின மனத்தினராய் காட்டிக் கொடுக்கும் குடிகேடிகளாய் உலாவரும் எட்டப்ப வம்சாவளியினரும் தினபதி போன்ற ஈனப் பத்திரிகைகளும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தாம் தாம் நினைத்தபடிவிமர்சனம் செய்கின்ற வேளை இது. தமிழர் கூட்டணியைத் தமிழ்மக்கள் நிராகரித்து விட்டனர் என்றும் தமிழ் அரசுக் கட்சிக்குத் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை என்றும் புதிய அரசியல் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்றும் தமிழ் விரோதிகள் தம்பட்டம் அடிக்கும் காலம் இது.

18 ஆண்டுகளாக கட்டிக் காத்த தொகுதியில் என்றும் இல்லாத அளவு ஆட்சியாளரின் அடக்கு முறையும் அட்டூழியமும் தமிழ் மக்களை ஆட்டிப்படைக்கும் இக்கட்டான இச்சந்தர்ப்பத்தில், தமிழர்களை முற்று முழுதாக அடிமைப்படுத்தும் புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்ட பின் நடைபெற்ற முதலாவது தேர்தலில் தோல்வி காண வேண்டி ஏற்பட்டு விட்டதே என தமிழ்த் தலைவர்கள் கூட சோர்வடையும் கட்டம் இது!

இந் நிலையில் இங்கு உப தேர்தல் நடைபெற்ற காலகட்டத்தில் இத்தொகுதியில் தமிழ் அரசு வேரூன்றி இருந்த நிலையையும், தேர்தலில் இடம் பெற்ற பிரச்சாரங்களையும், தேர்தல் முடிவில் கிடைத்துள்ள வாக்கு விபரங்களையும் மிக நுட்பமாக ஆராயுமிடத்து தமிழ் அரசுக் கட்சி உண்மையில் செல்வாக்கு இழந்து விட்டதா? தமிழர் கூட்டணியை மன்னார் மக்கள் நிராகரித்துத்தான் விட்டார்களா? புதிய அரசியல் சட்டத்தை மனப் பூர்வமாக ஏற்றுக் கொண்டார்களா? என்பன போன்ற வினாக்களுக்கு மிக இலகுவில் விடை காணலாம்.

### தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறு

மன்னார்த் தொகுதியிலே மிகப் பெரும்பான்மையான மக்கள், அரசியல் அறிவு குறைந்த பாமர மக்களே! கடந்த 18 ஆண்டுகளாக மன்னாரில் தமிழ் அரசுக்கட்சி வெற்றிபெற்றும் கூட இங்கு நிலையான, நிரந்தரமான ஓர் கட்சிக் கிளை கூட இயங்கி வரவில்லை. கட்சியின் பால் பற்றுக்கொண்ட ஏராளமான தொண்டர்கள் இத்தொகுதி முழுவதும் பரந்து இருந்தும் அவர்களது உணர்ச்சியை, உழைப்பைப் பயன்படுத்தத் தமிழ்த் தலைவர்கள் தவறி விட்டனர்.

யாழ்ப் குடாநாட்டில் அடிக்கடி நடப்பது போன்று அரசியல் கூட்டங்களோ, விடுதலைப் போராட்டங்களோ இங்கு நடப்பதில்லை. இந்த நிலையில் பெரும்பாலான பாமர மக்கள் அமரர் அழகக்கோன் அவர்களைப் பற்றி அறிந்திருந்தார்களே ஒழிய தமிழ் அரசுக் கட்சியைப் பற்றியோ, தமிழர் கூட்டணியைப் பற்றியோ தமிழரின் இன்றைய நிலை பற்றியோ அறிந்திருக்கவில்லை.

### தடுமாற்றம்

இந்த மாதிரியான அசமந்த நிலையில் திடுதிப்பென்று தேர்தல் வந்தவுடன் தமிழரசுக் கட்சியினர் ஓர் புதிய வேட்பாளரை அறிமுகப் படுத்தியும் ஐ. தே. க. வினர் தமது வழமையான வேட்பாளரை நிறுத்தியும் பிரச்சாரத்தை முடுக்கி விட்டபோது மேற்குறிப்பிட்ட பாமர மக்கள் தடுமாற்றம் அடைவது இயல்பே!

**அ. எலியாஸ்பிள்ளை**

—முருங்கன்—

எமது அரசு வந்தால்தான் உணவுப் பற்றுக்குறை நீங்கும், கட்டுப்பாடு நீங்கும் விலைவாசிகள் குறையும். உத்தியோகங்கள் தருவோம் அரசியல் சட்டத்தை கிழித்தெறிவோம், மொழிப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்றெல்லாம் ஐ. தே. க. வினர் கூறிய மயக்கு மொழிகள் பாமர மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

தமிழரசு வேட்பாளரைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாக அவருடைய சொந்த இனத்தவரைக் கொண்டே துர்ப்பிரச்சாரத்தை பாமர மக்களிடையே புகுத்தியும் அவர்களைத் தடுமாற வைத்தனர்.

### அறிவுடையோர் ஒப்புக்கொள்ளார்

இத்தகைய 'மாயப்' பிரச்சாரங்கள் மத்தியிலும் சிறுசிறு சலுகைகள் சண்டப் பிரசண்டங்கள் ஊடேயும் தமிழ் அரசுக் கட்சியின் பலமான அமைப்பு இல்லாத இத் தொகுதியில், புதிய வேட்பாளரை அறிமுகப் படுத்திய இச் சந்தர்ப்பத்தில் ஐ. தே. க. வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகளில் அவருடைய சொந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களதும் சிங்கள சமூகத்தவரதும் வாக்குகளைத் தவிர்த்துப் பார்க்கும் இடத்து 2,500 தமிழர்கள் தான் ஐ. தே. க. வுக்கு வாக்களித்துள்ளார்கள் என்றால்; மீதித் தமிழர்கள் அனைவரும் இத்தனை 'மாய'ப்பிரச்சாரங்கள் சோதனைகள் மத்தியிலும் இலட்சியப் பிடிப்புடன் தந்தை செல்வாவின் அணியில், தமிழ் அரசுக் கட்சியில், அமரர் அழகக்கோன் விட்டுச் சென்ற பாதையில் சிறிதும் நெறி பிறழாது, மனந்தளராது தமிழ் அரசு வேட்பாளரை ஆதரித்துள்ளனர் என்றால், இங்கு தமிழ் அரசுக்கு செல்வாக்கு இல்லை தமிழர் கூட்டணியை மன்னார் மக்கள் ஏற்கவில்லை யென்று எந்த அறிவு படைத்த மனிதனும் ஒப்புக் கொள்ள முடியாது!

மாறாக மன்னார் மண்ணிலும் 13,000 மானத் தமிழர்கள் மானத்தை — சுயமரியாதையை இழக்க விரும்பாத, ஆட்சி ஆளரின் அடக்கு முறைக்கு கெஞ்சித் தும் அடிபணிய நினையாத, மொழிஉரிமையைப்பறிகொடுக்க விரும்பாத வைர நெஞ்சுடன்; உணர்ச்சித் துடிப்புடனும் உள்ளக் குமுறலுடனும் தமிழ் அரசுக் கட்சியின் கீழ் விடுதலைப் போரை எதிர்நோக்கித் திரண்டு நிற்கின்றனர் என்ற உண்மையை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

### எங்கும் சோகம்

தேர்தல் முடிவு தெரிந்ததில் இருந்து இங்குள்ள தமிழர் எல்லாம் எட்டு வயதுச் சிறுவர் முதல் வயோதிபர் ஈறாக மாறாத சோகத்துடன் உளச் சோர்வுடன் இலகுவில் இழக்க முடியாத எதையோ பறிகொடுத்த மனத்தினராய் வருந்தி அழும் காட்சியை; ஐ. தே. க. வுக்கு வாக்களித்த பாமர மக்கள் கூட தமிழரசு தோற்று விட்டது என்பதை எம்மால் நம்பவே முடியவில்லை; ஏமாந்துபோய் வாக்களித்தோம்; எம்மை ஏமாற்றி விட்டார்களே! என்றெல்லாம் கூறிவருந்திடும் காட்சியை இங்கு காண்பவர்க்கு மேற்குறிப்பிட்ட உண்மை தெற்றென விளங்கும்.

### தலைவர்கள் கடமை!

இந்நிலையில் தமிழ்த் தலைவர்கள் இனிமேலாவது நிலைமையை நன்கு பரிசீலித்து மன்னார்த் தொகுதி மக்களின் விடுதலை உணர்வை தகுந்தவாறு பயன்படுத்திட முன்வர வேண்டும். மன்னார்த் தொகுதிக்கென வலுவானகட்சி அமைப்பை உருவாக்க வேண்டும். தொகுதி முழுவதும் கிராமங்கள் தோறும் நிலையான கட்சிக் கிளைகளை நிறுவி அவ்வப்போது அரசியல் கூட்டங்கள் விடுதலைப் போராட்டங்களை நடாத்தி பாமர மக்களிடம் மொழி உணர்வை வலுவாக வளர்க்கப் பாடுபடல் வேண்டும். இத்தகைய செயற் திட்டங்களை நிறைவேற்றிட, கிளை அமைப்பு நிறுவிட, விடுதலை இயக்கங்களை நடாத்திட இங்கு ஆயிரமாயிரம் இலட்சிய வீரர்கள் விடுதலை எனும் உணர்வுடன் தலைவர்கள் ஆணையை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

உள்ளம் நைந்த நிலையில் உணர்ச்சித் துடிப்புடன் இங்கு இருக்கும் என்போன்ற ஒவ்வொரு தமிழரசுத் தொண்டனதும் தாழ்மை வேண்டுகோள் இதுதான்.

---

## தியாகிகளுக்கு அஞ்சலி

பேசாலை தமிழரசுக் கட்சிக் கிளையினரால், தமிழாராச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ச்சியின்போது உயிர் இழந்த ஒன்பது தமிழ் தியாகிகளின் ஆத்ம சாந்திக்காகக் கட்சிக் கிளை வளவில் 10-3-74ல் இரங்கல் கூட்டம் நடாத்தப்பட்டது.

இவ் விழாவின்போது ஒன்பது தியாகிகளுக்குச் சொல்லாரம் சூட்டப்பட்டதுடன் தியாகிகளின் ஆன்ம சாந்திக்காக இரு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

# தமிழ்ச் சேவையிலே உயிரீந்த இளைஞர் ராஜன் தேவரட்ணம்!

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று பொது மக்களை பொலிசார் மிருகத்தனமாக வேட்டையாடிய நேரத்தில்— சிதறியோடி, பேருந்து நிலையத்திற்கு அச்சமும் திகிலுமாக வந்து சேர்ந்த மக்களை பேருந்துகளில் ஏற்றி அனுப்ப முயன்று கொண்டிருந்த போது, தன் உயிரை இழந்தவர் இளைஞர் ராஜன் தேவரட்ணம்.

தமிழ் மக்களுக்கு நெருக்கடிமிக்க நேரத்தில் தன் உயிரையும் திரணமாக மதித்து தொண்டாற்றிக் கொண்டிருந்த போது தான் — தன்னுயிரையே தந்து தியாகியானார் இளைஞர் தேவரட்ணம்.

கணக்குப் பரிசோதகர் ஆகக் கடமையாற்றிய இந்த இளைஞருக்கு வயது ஆக இருபத்தேழு தான்! காதலியுடன் கைசேர்த்து களிப்புடன் திரிய வேண்டிய வயதில் தமிழ்க்கடமையில் ஈடுபட்டு உயிர் தந்தார்.

யாழ். சிங்கப்பூர் பார்மசி உரிமையாளர் தரு பொன்னம்பலம் நவரத்தினம் — ஞானதேவி ஆகியோரின் இளைய மகனுன இவரின் மூத்த சகோதரர் ரஞ்சன் ஞானரட்ணம். சகோதரி பெயர் மாலினி கந்தசாமி.

யாழ் மத்திய கல்லூரியின் மாணவர் இவர்.

தன் இளைய சேயைப் பறிகொடுத்த அன்னை ஞானதேவி வடிக்கும் கண்ணீரை யாரால் ஆற்ற முடியும்?

என்றாலும் — மக்கள் தொண்டில் ஈடுபட்டிருந்த போதுதான் தன் மகன், மக்களுக்காக உயிர் கொடுத்தான் என்பதில்



அவர்களுக்கொரு ஆறுதல் — தாங்க முடியாத் துன்பத்திலும் ஓர் இன்பம்!

துணிச்சல் மிக்க இளைஞர் ராஜன் தேவரட்ணத்தின் பெயர் தமிழர் நெஞ்சங்களில் என்றும் நிலைவிருக்கும்!

ஆசிரியருக்கு ஒரு கடிதம்:

# தமிழர் வரலாறு உருவாக தமிழினம் கை கொடுக்குமா?

ஆசிரியர்,
சுதந்திரன்.

அன்புள்ள ஐயா,

'யாழில் எழுந்த தமிழோசை' என்னும் தங்களின் கட்டுரைத் தொடரில் 10-3-74ல் வெளிவந்த கட்டுரையில் ஈழத்தமிழர்களின் வரலாறு முறையாக எழுதப்படவேண்டும் என்றும் அம்முயற்சியில் கலாநிதி சி. பத்மநாதன்போன்ற இளைய தலைமுறையினர் இப்போதிருந்தே ஈடுபடவேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தீர்கள்.

எமது உண்மையான வரலாற்றை எழுதுவதற்கு எம்மிடையே தகுதி வாய்ந்த அறிஞர்கள் இல்லாமல் இல்லை. ஏன் கலாநிதி சி. பத்மநாதன் அவர்களே யாழ்ப்பாண இராச்சியம் என்ற வரலாற்று ஆராய்ச்சியை 1969ம் ஆண்டில் எழுதி முடித்து அதற்காக இலண்டன் சர்வகலாசாலையின் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றிருக்கிறார். அதற்குப் பின்பு அவர் அதை விரிவுபடுத்தி எழுதியும் உள்ளார்.

ஆனால், அது இதுவரை வெளியிடப் படாமல் கைப்பிரதியாகவே, இருந்து வருகின்றது! ஆராய்ச்சி செய்து எழுதுகின்றவரே மேலும் செலவு செய்து வெளியிட வேண்டுமா? முடியுமா? அப்படித் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது முறையா?

ஆகவே, தமிழ் பெரு மக்களில் எவராவதோ, அல்லது ஏதாவது ஒரு ஸ்தாபனமோ இப் பணியை — அவசியமும் முக்கியமுமான இப்பணியை செய்ய முன்வரவேண்டும். முன்வருவார்களா?

இல்லையேல், தமிழ்ப் பொது மக்களாவது ஒன்று கூடி இப் பணியைச் செய்ய முன் வருவார்களா? அப்படி முன் வருவதற்கு ஆயத்தமாக உள்ளவர்கள் என்னுடன் தொடர்புகொண்டால் நாம் எல்லாருமாகச்சேர்ந்து நாலைந்து வருடங்களாகக் கைப்பிரதியாகவே கிடக்கும் இவ் வரிய ஆராய்ச்சி நூலை வெகு விரைவில் வெளியிட்டு விடலாம். சிறுதுளி பெரு வெள்ளம் என்பார்கள். சிறிய தொகைகளாகச் சேர்த்தாவது நாம் இதைச் சாதித்து விடலாம்.

இதை நாம் செய்துவிட்டால், இப்புத்தகத்தைத் தொடர்ந்து கலாநிதி பத்மநாதன் அவர்களோ அல்லது வேறு எவருமோ தமிழ் மக்களின் வரலாற்றின் ஏனைய பகுதிகளையும் எழுதியுதவ ஏதுவாக இருக்கும்.

—அருள். மா. இராஜேந்திரன்
111, பிக்கறிங்ஸ் வீதி
கொழும்பு-13

## இ. போ. ச.வே ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்க வேண்டுமென்றோ இ. போ. ச. எப்போதும் எந்த வகையான உத்தரவையும் பிறப்பிக்கவில்லையென்றும் தேசிய பேரவையில் போக்கு வரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன அண்மையில் கூறியிருந்தாரல்லவா? இதற்குப் பதிலளித்து திரு. இரத்தினம் அமைச்சருக்கு 17-3-74ல் பின்வரும் கடிதத்தை எழுதியுள்ளார்.

### சேரிடப்பலகைகளில் தமிழ் உடன் நடவடிக்கைக்கு

இ. போ. ச. தலைவர் கருத்துப்படி தலைமைச் செயற்படு முகாமையாளர் ஓஜி/ஏ/32 ஆம் எண்ணையும் 1-12-73ம் திகதியையும் கொண்ட தமது 1963ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சுற்றறிக்கையினுல் சேரிடப் பலகைகளில் இடங்களின்பெயர்களைச் சிங்களத்தில் 5 அங்குல உயரமாகவும் தமிழில் 2 அங்குல உயரமாகவும் எழுதவேண்டுமென எல்லா சாலைக் கண்காணிப்பாளர்களையும் பணித்துளர்.

ஏனவே தமிழ்ப்பகுதிகளில் தமிழைச் சிறிதாக எழுதியதிற்கு நீங்கள் பேரவையில் கூறியபடி சில விஷமிகள் காரணமல்லர், உங்கள் இ. போ. ச. உத்தியோகத்தர்களே பொறுப்பானவர்கள் என்பதை உங்களுக்கு அறிவிக்கவிரும்புகிறேன்.

நீங்கள் தேசிய அரசுப் பேரவையில் எங்களுக்குக் கூறியவாறு இன்னும் தமிழ்ப் பகுதிகளில் தமிழ்ப் பெயர்கள் பெரிய எழுத்தில் எழுதப்படவில்லை. தமிழ் மக்கள் தொடர்ந்து முறையிடுகின்றனர் இதனுல் மீண்டும் இவ்விடயத்தைத் தேசிய அரசுப் பேரவையில் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருதற்கு முன் உங்கள் மறுமொழியை எதிர்பார்க்கின்றேன்.

## தொழிற்சங்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்படும் இத்தொழிற் சங்கவாதிகள், நசுக்கப்பட்ட மக்களையும் சிங்கள தமிழ் தொழிலாளர்களையும் ஒன்று சேரவிடக்கூடாது என்ற விருப்பத்தைக் கொண்டவர்கள் —"

— இவ்வாறு தொழிற் சங்கங்கள்மீதும், தொழிற் சங்கத் தலைவர்கள் மீதும் சேற்றைவாரியிறைத் திருப்பவர் யார் தெரியுமா? சோசலிசம் பேசும் அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தான்! (ஆதாரம் சுழநாடு 4. 2. 74)

இதே குமாரசூரியர், மலையகத்திலும் முன்பொரு முறை இப்படித் தொழிற் சங்கத் தலைவர்களைத் தாக்கிப்பேசி, ஜ: தொ. கா. தலைவர் ஜனுப் அசிசிடம் முறையாக வாங்கிக்கட்டிக் கொண்டது சுதந்திரன் வாசகர்களுக்கு நினைவிருக்கும்!

## பூவும் கைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாருக்கோ, மந்திரிக்கோ பூவைத்தானும் எறிந்தாலும் கல்லென்றும், கைக்குண்டென்றும் பொலிசார் வெருண்டு ஒன்றுமறியாத மாணவ மாணவிகளைத் தாக்கக் கூடும்.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின்போது நடந்த அசம்பாவிதங்கள் மரணங்கள் மீண்டும் நடக்காமல் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பது உங்கள் பொறுப்பு? ஆகவே மாணவ, மாணவிகளைத் தெருக்களில் நிறுத்தி மந்திரியை வரவேற்கும் கருத்தற்ற அபாயமான நடவடிக்கையை கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் கோப்பாய் பா. உ. மான திரு. சி. கதிரவேற்பிள்ளை கல்விமந்திரியின் யாழ்ப்பாண விஜயத்தின் போது அவரை வரவேற்க மாணவ மாணவியரை கட்டாயப்படுத்துவதைக் கண்டித்து வடமாநில கல்வி அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்:

## தமிழ்நாட்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாக சின்னஞ் சிறிய இடமும் தரப்பட்டிருப்பது தெரிந்ததே;

தமிழ் நாட்டில் தமிழை இப்படி அவமதிப்பதையும் — சிங்களத்துக்கு முதலிடம் தருவதையும் எதிர்த்து தமிழ் இளைஞர்கள் ஆங்காங்கே போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரம், இவ்வாறு சிங்களத்தை பெரியதாகவும், தமிழ், ஆங்கில எழுத்துக்களை சிறியதாகவும் கொண்ட சேரிடப்பெயர்ப் பலகையுடன் கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த இ. போ. ச. பேருந்து ஒன்றை கோட்டைக்கல்லாறு என்னுமிடத்தில் நிறுத்திய சில தன்மானத் தமிழ் இளைஞர்கள் அதிலிருந்து பெயர்ப் பலகையை அகற்றிவிட்டு — தமிழைப் பெரியதாகவும் சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றை சிறியதாகவும் எழுதி தாங்கள் ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்த பெயர்ப்பலகையை அதில் மாட்டி, அப்பேருந்தை அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளனர்.

இச்செயல் கிழக்கு மாகாணத் தமிழ் இளைஞர்களின் துணிவையும் மொழிஉணர்ச்சியையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இதே போல சில காலத்துக்கு முன் வல்வெட்டித் துறையிலும், சிங்களத்துக்கு முதலிடம் தந்திருந்த பெயர்ப்பலகையை இ. போ. ச. பேருந்து ஒன்றிலிருந்து அகற்றி அதற்குப் பதிலாக தமிழுக்கு முதலிடம் தந்து தாங்கள் தயாரித்து வைத்திருந்த பெயர்ப் பலகையை மாட்டி அனுப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழர் காணிகளே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிளை இனவெறியர்களின் கூடாரமாகவே செயலாற்றி வருவதாகவும் அரசாங்க தேவைகளுக்கோ, அன்றி விடமைப்பு திட்டத்துக்கோ—அல்லது வேறு எதற்கு காணிவேண்டும் என்றாலும், எங்கெங்கே தமிழர்களின் நிலங்கள் உள்ளன என்பதை தேடிப்பிடித்து அவற்றை சுவிகர்ப்பதிலேயே இக்காணிக்கிளையிலுள்ள பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுவருவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

மேற்படி காணித்திணைக்களத்தினரின் இந்தப் பாரபட்ச இனவெறிப்போக்கு உடனடியாகக் கைவிடப்படாவிடின் புத்தளம், சிலாபம், உடப்பு போன்ற பகுதிகளில் உள்ள தமிழர்களுக்கு சொந்தமான நிலம் முழுவதும் சுவீகரிக்கப்பட்டு சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு விடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

மேற்படி காணித்திணைக்களத்திலுள்ள அதிகாரிகளின் இந்த வகுப்புவாத தமிழ் விரோதப் போக்கைத் தடுத்து நிறுத்த காணி அமைச்சர் கொப்பேகடுவவும், புத்தளம் தேசிய் பேரவை உறுப்பினர் நயினுமரிக்காரும் உடன் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்றும் அவர்கள் கேட்கின்றனர்!

## முத்தமிழ் விழா

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் மன்றத்தினர் எதிர்வரும் 31-ம் திகதியன்று இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் முத்தமிழ் விழா கொண்டாடுவர்.

காலை நிகழ்ச்சியில் விவாத அரங்கு, இலக்கிய அரங்கு கவிதை அரங்கு ஆகியன நடைபெறும்.

மாலை நிகழ்ச்சி திரு. ஏ: கே. கருணாகரனின் இசைக் கச்சேரியுடன் 3-45 மணிக்கு ஆரம்பயாகும். அரஸ்கோ சகோதரிகளின் பரதநாட்டியமும், திருமதி. அருந்ததி ரங்கநாதன் குழுவினரின் நவ்லைக் க[illegible]யும், மன்ற உறுப்பினர்களின் நாடகமும் நவீன விதா காலட்சேபமும் நடைபெறும்:

### யோகக் கலை

'நோய் வராமல் தடுப்பவன் அறிஞன்.'

—ஞானி.

நோய் வராமல் இருக்க யோகாசனம் செய்யுங்கள். 50 மில்க்வைற் நிலசோப் மேலுறைகளை அனுப்பி யோகாசனப் பயிச்சி படங்களையும், யோகக்கலை என்ற புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

## அரசியல்மடல்

# நெடும் பயணம் நிறையும்வரை நெஞ்சே உனக்கு ஓய்வில்லை!

அன்பு நண்பா,

எத்தனையோ இடுக்கண்களையும் இழி மொழிகளையும் தாங்கிக்கொண்டு—இன விடுதலை எனும் இலட்சியத்தை இதயத்திலே ஏற்றிக் கொண்டு—கல்லும் முள்ளும் காராக் கிருகங்களும், சிறைவாழ்வும் சித்திரவதையும், அடியும் உதையும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளும், துப்பாக்கிவேட்டுச் சத்தமும், தூக்குமேடையும் நிறைந்த சுதந்திரப் பாதையிலே 'தண்ணீர்விட்டோ வளர்த்தோம் சர்வேசா, இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்—கருகத்திருவுளமோ' என்று செந்நீர் வடித்த படி நடைபோட்டு வருகின்ற உன் உள்ளத்துக்கு தெம்பூட்டுகின்ற—உவகைதருகின்றசிலசெய்திகளை ஏடுகளிலே படித்து—அவற்றை உனக்குச் சென்றகிழமையே சொல்ல வேண்டுமென்று மெத்த ஆவலோடு எண்ணியிருந்தேன்—ஆனாலும் இந்தக் கிழமைதான் அதற்கு நேரம் கிடைத்திருக்கிறது!

நண்பா, விடுதலை என்பது நாம் சும்மா விருந்திட, அது தானாகவே கனிந்து நம் மடி மீது வந்து விழுகின்ற கனியன்று; நாமாகவே நம் இனத்தின் விடுதலையைத் தேடி—அதற்கு கொடுக்கவேண்டிய விலைகளைக் கொடுத்து—தியாகங்களைச் செய்து—அதை நாடிச்செல்ல வேண்டும்! சுயநலங்களையும், சுகபோக வாழ்வுகளையும், வசதிவாய்ப்புக்களையும் இழக்கச் சித்தமாக இருந்திடவேண்டும்! விடுதலைப் பணிக்கு நம்முடைய நேரம் நினைப்பு, உழைப்பு அனைத்தையுமே பூரணமாக ஒப்படைத்திடச் சித்தமாக இருந்திடவேண்டும்!

உலக நாடுகளின் விடுதலைப் போராட்டங்களை எடுத்துப் பார்த்திடின், எந்த ஒரு விடுதலை இயக்கத்தவர்களும் — தம் குடும்ப நலத்தையும் தம் சுகபோக வாழ்வையும் கவனித்துக்கொண்டு மேல்மிச்சமாகக் கிடைக்கின்றநேரங்களில் மட்டும் சுதந்திரத்துக்காகப் போராடியதாக வரலாறு இல்லை! விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டால் அதன் விளைவுகள் என்ன? இன்ன சட்டத்தை மீறினல் இத்தனை வருடங்கள் சிறைத் தண்டனை கிடைக்கும் என்று சட்டப் புத்தகத்தைப் பிரித்து படித்துப்பார்த்துவிட்டு போராட்டங்களில் எந்த விடுதலை வீரர்களும் குதித்ததில்லை! எதிர்க்கப்படவேண்டிய சட்டங்களை எதிர்த்தார்கள்; அதன் விளைவுகளை ஏற்றார்கள்; சிறைகளை நிறைத்தார்கள்! தம் நாட்டுக்காக கொடுமைகளை எல்லாம் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொண்டார்கள்!

வசதி வாய்ப்புக்களுடன் செல்வச் செழிப்புக்களுடன் வாழவேண்டிய வ. உ. சிதம்பரனார்—ஆங்கிலேயரை எதிர்த்து சுதேசிக்கப்பலை ஓட்டி, அதன் பயனாக ஆயுள்தண்டனை ஏற்று சிறையில் செக்கிழுத்தார்! திருப்பூர் குமரன் விடுதலைக் கொடியை—இந்திய தேசிய கொடியை—காப்பதற்காக தன் உயிரையே தந்தான். பொலிசார் அடித்துக்கொன்றபோதும அந்த வீரன் தன் தாயின் மணிக்கொடியை கை விடவில்லை! பங்களாதேஷ் சுதந்திரப் போராட்டத்தின்போது — முஜிபுர் ரகுமானும், அவரது மனைவியும் பிள்ளைகளும் வேறு வேறாகப் பிரிக்கப்பட்டு — ஒருவர் இருக்குமிடம் மற்றவர்க்கு தெரியாமல் — தனிமைச் சிறைக்குள் தள்ளப்பட்டபோதும்—மரணக்குழி கண்முன்னாலேயே தோண்டப்பட்டபோதும்—வங்கத்தின் விடுதலைச் சிங்கம் தன் நாட்டுக்காக—தன் இனத்துக்காக — அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டாரே தவிர இலட்சியத்தை இழந்துவிடவில்லை!

ஆம் நண்பா, அவ்வளவு தூரம் வைராக்கியமும் இலட்சிய உறுதியும் மிக்கவர்களே ஒரு விடுதலை இயக்கத்தில் இருந்திடத்தகுதி பெற்றவர்கள்! விடுதலை இயக்கத்துக்கு தலைமைதாங்கி வழிநடத்திடக் கூடிய ஆற்றலை பெற்றவர்கள்! விடுதலைப் போராட்டத்தில்—அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபட்டால், தன் குடும்பசுகம், வருமானம், அனைத்தும் பாதிக்கப்படுமே—அமைதியான குடும்ப வாழ்க்கை சிதையுமே — என்றெல்லாம் அஞ்சுபவர்கள்; அந்த அச்சத்தின் காரணமாக, விடுதலை இயக்கத்தையே தள்ளிப்போட்டு வருபவர்கள் ஒரு விடுதலை இயக்கத்திலே இடம்பிடித்திருப்பார்களாயின்—அந்த விடுதலை இயக்கம் ஓர் அடி கூட முன்னேறிட முடியாது!

நண்பா, உன் உள்ளத்துக்கு தெம்பூட்டுகின்ற செய்திகளை—விடுதலைப் போராட்டங்களில் வெற்றிகண்டு சுதந்திரம்பெற்றவர்களைப் ற்றிய செய்திகளை — கூறுவதாக சொல்லி ப விட்டு, எங்கெங்கோ சென்றுவிட்டேன் என்கிருயா? இல்லை நண்பா இல்லை—விடுதலைப் போராட்டத்தினைப் பற்றி என் சிந்தையில் எழுந்த சில கருத்துக்களை உனக்கு எடுத்துக் கூறினேன்! அவ்வளவுதான்!

கிரனடா என்ருேர் சின்னஞ்சிறு தீவு! குட்டித் தீவு; ஆக ஒரு இலட்சத்து இருபதினாயிரம் பேர்களை மட்டுமே கொண்ட தென் கிழக்குத் தீவு அது! இத் தீவின் பரப்பளவு எவ்வளவு தெரியுமா? 344 சதுர கிலோ மீட்டர்! நம் தமிழ் ஈழத்தைவிட பல மடங்கு சிறிய தீவு! இந்தத் தீவு தனது சுதந்திரப் போராட்டத்தில் அண்மையில் வெற்றியீட்டியிருக்கிறது! பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டுமென்று அந்நாட்டின் மக்கள் நடத்திய தேசிய விடுதலை இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது! இப்போது அது ஓர் சுதந்திர நாடு! காமன்வெல்த்தில் ஒரு தனி நாடாக அது இடம் பெறப்போகிறது! ஐ. நா. சபையிலும் இனி அதற்கு இடம் கிடைத்திடப் போகிறது!

நண்பா, சின்னஞ் சிறு கிரனடாதீவு தனி சுதந்திர நாடாக—தனிக் கொடியுடன்—தலை நிமிர்ந்து வாழும்போது கிரெனடா தீவை விட மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் அறிவு வளம், ஆற்றல் வளம், பொருள் வளம் அனைத்திலுமே பல மடங்கு உயர்ந்ததாக விளங்கும் நம் தமிழ் ஈழம் ஏன் தனித்து இயங்க முடியாது? இந்தக் கேள்வி இப்போது உன் உள்ளங்களில் எழுகிறதல்லவா!

நண்பா, உலகமடங்கணும் எல்லா இனங்களுமே தங்கள் தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் போராடிக்கொண்டுதான் இருக்கின்றன நம்மைப் போல! சுதந்திரத்துக்காக போராடி, அதில் வெற்றிபெற்றுள்ள குட்டித் தீவு 'கிரனெடா' பற்றிக் கூறினேன்! இதோ மற்ருேர் செய்தி!

பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்டிருக்கும் ஸ்கொட்லாந்து, பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விலகி தனி ஆட்சியாக—தனி நாடாக இயங்க வேண்டுமென்கின்ற கிளர்ச்சி நீண்டகாலமாக அங்கு இருந்துவருவதனை நீ அறிவாய் ஸ்கொட்லாந்து தேசியவாதிகள் — விடுதலை இயக்கத்தினர் — பிரிட்டிஷ் தேசிய கீதத்தை ஏற்க முடியாதென அண்மையில் நிராகரித்திருக்கிருர்கள்! இங்கிலாந்தில் நடைபெறும் உலக உதைபந்தாட்டக் கோப்பைக்கான இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் போது—'ஆண்டவரே, மகாராணியாரைக் காப்பாற்றும்' என்ற பிரிட்டிஷ் தேசிய கீதத்தை ஸ்கொட்டிஷ் உதை பந்தாட்ட வீரர்கள் இசைத்திடமாட்டார்கள் என்றும் பிரிட்டிஷ் தேசிய கீதத்துக்குப் பதிலாக ஸ்கொட்டிஷ் தேசிய கீதமே இசைக்கப்படவேண்டுமென்றும், ஸ்கொட்லாந்து தேசிய விடுதலை இயக்கத்தினர் அறிவித்துள்ளனர்!

நண்பா, ஒவ்வொரு தேசிய இனமும், ஒவ்வொரு நாடும், தனது சுயமரியாதையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்திடுவதற்கு ஆங்காங்கே நம்மைப்போலவே போராடிக்கொண்டு வருகின்றன-கிளர்ச்சிசெய்துவருகின்றன—என்பதை பிரிட்டிஷ் தேசிய கீதத்தை நிராகரித்துவிட்டு, தங்கள் சொந்த தேசிய கீதத்தை ஸ்கொட்டிஷ் தேசியவாதிகள் இசைக்கவிருக்கின்ற களிப்பூட்டும் செய்தி எடுத்துக்கூறுவதுடன் நமது இலட்சிய போராட்டத்துக்கும்வலுவூட்டுறதல்லவா?

இதோ—மற்ருேர் இனிப்பான செய்தி—இன விடுதலை கோருவோருக்கு உவப்பூட்டுகின்ற செய்தி!!

பாகிஸ்தானில் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்ற பட்டாணிய மக்கள் — தங்களுக்கு சுயநிர்ணய உரிமை கோரி — நம்மைப் போலவே அங்கு போராடிவரும் நிகழ்ச்சி உனக்குத் தெரிந்திருக்கும்! சுயநிர்ணய உரிமை கோரிப் போராடிவருகின்ற பட்டாணிய சிறுபான்மை மக்களுக்கு உற்சாகமூட்டுகின்ற செய்தியொன்றை ஆப்கானிஸ்தான் சனுதிபதி முகம்மத் தாவூத் அண்மையில் வெளியிட்டிருக்கிருர்! பாகிஸ்தான் பட்டாணியர்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை நூற்றுக்கு நூறு ஆதரித்திருக்கும் ஆப்கானிஸ்தான் சனுதிபதி பட்டாணியருக்கு ஆப்கானிஸ்தான் இராணுவ உதவி வழங்குமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு—'இவ்விஷயத்தில் நான் ஒரு திட்டவட்டமான பதிலைக்கூற முடியாது! ஆனால் 'நமது சகோதரர்களான பட்டாணியர்கள் மீது குண்டு மழை பொழியப்படும் போது — அவர்கள் கொலை செய்யப் படும்போது — எமது உதவியைக் கேட்டார்களானல் — நாம் சும்மா இருக்க மாட்டோம்!' என்று பதிலளித்திருக்கிருர்!

நண்பா, பட்டாணி சிறுபான்மை மக்களைப் போலவே ஈழத் தமிழர்களும் சுயநிர்ணய உரிமையை இன்று கோருகின்றனர்! தமிழ் தேசிய இனத்தின இச் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சீன ஆயுதங்களைக் கொண்டு நசுக்கிட—சிங்கள அரசு முயலுமானல்—நமது மக்களை கொன்று குவித்திடும் நிலைதோன்றுமானல்—ஆப்கானிஸ்தான் சனுதிபதிக்கு பாகிஸ்தானத்துப் பட்டாணியர் மீது வந்த சகோதர பாசம்—தமிழ் நாட்டில் வாழுகின்ற நாலரைக் கோடி தமிழர்களுக்கும் நிச்சயம் ஏற்படவே செய்யும்—அதை யாராலும் தடுத்திட முடியாது — என்கிற நம்பிக்கையை இச்செய்தி நமக்குத் தருகிறது!

கனடா நாட்டிலிருந்து வந்திருக்கும் மற்ருேர் செய்தியும் நம் உள்ளத்தைக் கவர்கிறது! கனடா, நமது நாட்டைப் போலவே ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளைப் பேசும் இரு தேசிய இனத்தவர்களைக் கொண்ட ஒரு நாடு! அங்கு இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது! சிறுபான்மை இனமான பிரெஞ்சு மொழி பேசும் கனேடியர்கள் வாழும் 'கியூபெக்' மாகாணத்தில் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இருமொழிகளும் ஆட்சிமொழிகளாக இதுவரை இருந்து வந்திருக்கின்றன!

ஆனல், அண்மையில்— பிரெஞ்சு மொழியே பெரும்பான்மையாகப் பேசப்படுகின்ற, பிரெஞ்சு பேசும் மக்களின் சொந்த தாயகமான கியூபெக் மாகாணத்தில் பிரெஞ்சு மொழி மட்டுமே ஆட்சி மொழியாக இருந்தால் போதும்—ஆங்கிலம் இங்கு தேவையில்லை என்று கூறி — பிரெஞ்சு மொழியை மட்டும் 'கியூபெக்' மாகாணத்தின் தனி அரசு மொழியாக ஆக்கியிருக்கிருர்கள் 'கியூபெக்' மாகாண அரசினர்!

ஆம் நண்பா, இங்கும், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் சொந்தத் தாயகம் — இவ்விருமாகாணங்களிலும் தமிழே ஆட்சி மொழியாக விளங்கிட வேண்டும் தமிழுக்கே முதலிடம் தரப்படவேண்டும் என்கின்ற நமது கோரிக்கைக்கு 'கியூபெக்' மாகாணத்தில் பிரெஞ்சு மட்டும் ஆட்சி மொழியாக்கப்பட்டது வலுவூட்டக்கூடிய ஒரு நிகழ்ச்சியல்லவா?

இப்படி, உலகெங்கும் இன விடுதலைக் கிளர்ச்சிகளும் மொழிப் போராட்டங்களும் நடந்தபடிதானிருக்கின்றன! அவை வெற்றி பெற்றும் வருகின்றன! நாமும், ஈழத்தில் நம்மினத்தின் விடுதலைக்கு—மொழியுரிமைக்கு போராடிவருகிருேம்!

யார் தடுமாறினலும் — யார் கொள்கை பிறழ்ந்தாலும் — இடைவழியே பயணத்தை விட்டு விட்டு நிழல் தேடி யார் ஒதுங்கினலும்—அவர்கள் தலைவர்கள் என்று கூறப்படுபவர்களேயானலும் சரி—தந்தை செல்வா ஏற்றி வைத்துள்ள இன விடுதலை எனும் அகல் விளக்கை—அமரர் வன்னியசிங்கமும, இரும்பு மனிதர் நாகநாதனும், திருமலைத் தியாகி நடராசனும், இராசவரோதயமும் ஐயாவு—பிரான்சிசும், அறப்போர் அரியநாயகமும் இன்னும் எண்ணற்ற தொண்டர்களும் உயிர்கொடுத்து காத்திட்ட விடுதலைஉணர்வுஎனும் அகல்விளக்கை—அணையாமல் காத்திட இனத்தின் விடுதலைக்காக எண்ணற்ற துன்பங்களைச் சந்தித்திட — இந்நாட்டிலுள்ள இளைய தமிழ்த் தலைமுறையினர்— ஈழத் தமிழினத்தின் வருங் காலத் தலைவர்கள்—தயாராக இருக்கின்றனர்!

பாம்பும் பல்லியும், கொடுக்கனும், தேளும் உலவக்கூடிய கொடுஞ்சிறையில் — தியாகத் தீயில்—இன்று புடம்போடப்பட்டு வருகின்ற தமிழ் ஈழத்தின் தங்கங்களான இளைய தலைமுறையைப் பார்த்திடும்போது நாம் எதுவிதத்திலும் அயர்வு கொள்ளத்தேவையில்லை!

அண்மையில்—இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தினர் கொழும்பில் நடத்திய தமிழ் விழாவுக்கு சென்றிருந்தேன், அங்கு இடம் பெற்ற கவியரங்குக்கு அழகான தொரு தலைப்பு கொடுத்திருந்தார்கள் — அது என்னை வெகுவாகக் கவர்ந்தது அத்தலைப்பு என்ன தெரியுமா? 'நெடும் பயணம் நிறையும் வரை நெஞ்சே உனக்கு ஓய்வில்லை!' என்பதுதான் அது!

ஆம்—விடுதலையை நோக்கி நெடும் பயணத்தில் ஈடுபட்டிருக்கும் உனக்கும் எனக்கும்—ஏனைய விடுதலை விரும்பிகளுக்கும் அந்தப் பயணம் நிறைவுறும் வரை எங்கே ஓய்வுண்டு?

—உன் அன்புத் தோழன்,

**கோவை - மகேசன்.**

# இலங்கைப் பிரதமருக்கு இலண்டன் தமிழர்களின்

# கண்டனக் குறிப்பு!

## 'போராட வேண்டிய நிலைக்குத் தமிழர்களை உங்கள் அரசே தள்ளுகிறது!'

கௌரவ இலங்கைப்
பிரதமர் அவர்கட்கு:-

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நிகழ்ச்சிகளின் பொழுது, பொலிசார் இழைத்த அட்டூழியங்களையிட்டு ஐக்கிய இராச்சியத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களாகிய நாங்கள் ஆழ்ந்த கவலையும், மனச்சஞ்சலமும் அடைந்துள்ளோம். இந்த அட்டூழியங்களின் பொழுது களப்பலிகளானோரின் அன்புக்குரியவர்கள் அனுபவிக்கும் துயரத்தில் ஆழ்ந்த பங்கெடுத்துக்கொள்ளும் அதே வேளையில், தற்பாதுகாப்பு எதுவுமின்றி கூட்டத்தில் திரண்டிருந்த அப்பாவி மக்கள் மீது பதின்மர் உயிர் இழப்பதற்கும், அநேகர் படுகாயங்களுக்காளாவதற்கும் காரணமாயமைந்த - ஹிட்லரின் நாஜிப்படைகள் கையாண்ட தந்திரத்தை ஒத்த பொலிஸ் தாக்குதலை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்:

மாநாட்டு நாட்களின் பொழுது, கருத்தரங்குகளில் பேசுவதற்கு தயாராக இருந்த தமிழறிஞர்கள் தமது முன்னுத்தரவைப் பெற்றிருந்தார்களா என உறுதிப்படுத்துவதற்கென தினமும் கீழ்த்தரமான எண்ணங்களுடன் கருத்தரங்கு மேடைகளுக்கு நேரடியாகச் சென்று, மாநாட்டு நடவடிக்கைகளில் தலையிட்டுள்ளனர் பொலிசார்.

வெளிநாட்டு அறிஞர்கள் முன்னிலையில், எதேச்சாதிகாரமான முறையில் பொலிசார் இத்தகைய அச்சுறுத்தல்களை தன்னிச்சையாகவும், வெட்கமின்றியும் பிரயோகித்துள்ளனர்.

"மாநாட்டின் இறுதிநாள் வரை பொலிசாரின் இத்தகைய தொந்திரவுகளும், அச்சுறுத்தல்களும் தொடர்ந்தன.

அறிஞர்களை ஆத்திரமூட்டுவதன்மூலம் மாநாட்டிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயன்று அதில் படுதோல்வி கண்ட பொலிசார், கட்டுப்பாட்டுடன் திரண்டிருந்த அப்பாவி மக்கள் மீது காடைத்தனம் புரிந்து இரத்தக்களரியை ஏற்படுத்தியுள்ளனர். கிளர்ச்சி எதுவுமற்றிருந்த மக்கள் கூட்டத்தின் மீது, முன்னெச்சரிக்கை இன்றி கண்ணீர்ப் புகை பிரயோகிக்கப்பட்டது. இதன் பிரதிபலனாக மக்கள் ஓர் திடீர் திகிலுக்குள்ளாயினர்:

" இக்கலவரத்தின் பொழுது கண்ணீர்புகையின் அகோரத்தினால் பார்வையிழந்து-திகிலடைந்த நிலையில் இருந்த மக்களை மின்

## இலங்கைத் தூதரிடம் கையளித்த மகஜர்!

கப்பிகள் கொண்டு தாக்கினர். தாக்குதலுக்காட்பட்டு தரையில் சரிந்து கிடந்த மக்களைக் காப்பாற்ற முற்பட்டவர்கள் மீது பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனர். திகிலடைந்த பெண்கள் செய்வதறியாது நாலாபக்கமும் சிதறி ஓடினர். அநேகர் துயிலிழந்து நிர்வாண நிலையிலே ஓட வேண்டியதாயிற்று: இந்த அட்டூழியங்களை எல்லாம் வெளிநாட்டு அறிஞர்கள் நே... கண்டனர். இவற்றின் பின்னர் உயிர்பலிக்குள்ளானோரும், காயமடைந்தோரும் கவனிப்பாரற்றுத் தரையில் கிடந்தனர். உயிர் இழந்தவர் பதின்மர்; படுகாயமடைந்தோர் அநேகர்.

"இந்த அட்டூழியங்களின் பின்னணியை ஆராய்ந்தால், தாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் மனத்தாங்கல்களுக்கு குரல் கொடுக்க சனநாயக மார்க்கம் எதுவும் இன்றிப் பரிதவிக்கும் இலங்கைத் தமிழினம் மீது பொலிஸ் பட்டாளம், இதைவிடக் கொடுமையான வன்செயல்களை மேற்கொள்ள இருப்பதற்கு முன்னோடி என்றே மேற்படி நடவடிக்கை தோன்றுகின்றது:

" ஆகவே, மேற்படி பொலிஸ் அட்டூழியங்களின் பொழுது உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட பாரிய நட்டங்களை மதிப்பீடு செய்து பாதிக்கப்பட்டோர்களுக்கு நட்டசடு வழங்கும் பொருட்டு, ஓர் பாரபட்சமற்ற பகிரங்க விசாரணைக் குழுவை நியமிக்குமாறு உங்களை மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

"மேலும் உங்கள் சிறையில் கடந்த ஓராண்டிற்கு மேலாக சுமார் எழுபது தமிழ் இளைஞர்கள் தமது வாழ்க்கையின் முக்கிய கட்டத்தில் விசாரணை எதுவுமின்றி வாடி வதங்குகின்றனர்; அவர்கள் மீது உடனடியாக வழக்குத் தொடருங்கள். வழக்குத் தொடரமுடியாதுவிடின் அவர்களை உடனே விடுதலை செய்து அவ்விளைஞர்கள் தமது படிப்பையும் வாழ்வையும் இழந்தமைக்கு தகுந்த நட்டசடு வழங்குங்கள்:

"சமாதானத்தில் நம்பிக்கைகொண்ட நாட்டு மக்கள் மீது பலாத்கார உணர்வுகளைத் தூண்டக்கூடிய மேற்படி இராணுவ நடவடிக்கைகளை உங்கள் அரசு தொடர்ந்து மேற்கொள்ளுமேயானால், சமாதானத்துடனும் மரியாதையுடனும் இதுவரை வாழ்ந்துவந்த இலங்கைத் தமிழ் இனம் தமது உரிமைகளை நிலைநிறுத்துதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் ஓர் போராட்டத்தை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இதற்கு உங்கள் அரசே உடந்தையாக இருந்ததென அமையும்:

---

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் முதல்வருமான பெரியவர் தந்தை செல்வா அவர்கள்—தமக்கேயுரிய அந்தச் சுந்தரப் புன்னகையை தமது பொன் முகத்தில் பொலியவிட்டபடி மாநாட்டு மண்டபத்துக்குள் மெல்லமெல்ல வந்துகொண்டிருந்தார்.

சாதி மத, பிரதேச வேறுபாடுகளையும், கட்சி அரசியல் மாச்சரியங்களையும் கடந்து — தமிழ் ஈழத்தின் ஒப்பற்ற தலைவராக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அந்த முதுபெரும் கிழவருக்குத்தான் அங்கிருந்த அறிஞர் பெருமக்கள் எழுந்து நின்று அப்படி மரியாதை செய்தனர்!

காலை மணி சரியாகப் பத்து! கொட்டு மேளம் கொட்டுகிறது! வீரசிங்க மண்டப வாயிலிலிருந்து மேடையை நோக்கி அழைத்து வரப்படுகின்றனர் மாநாட்டு அமைப்பாளர்களும், மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளும்!

தாங்காமை, கல்வி, துணிவுடைமை—இம் மூன்றும் கொண்ட மாநாட்டுத் தலைவரும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் தலைவருமான பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன்—

அமைதி—அடக்கம்—சான்றாண்மை — ஆகியவற்றுடன் அறிவொளி சிந்தும் முகத்தினராக காணப்படும் தமிழ் முனிவர்—வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளார்—

தோற்றத்தினால் ஒருவெளிநாட்டுப் பிரதிநிதிபோலவும்-உள்ளத்தினாலும் உணர்வினாலும்—தமிழராகவும் காட்சிதரும் அறிஞர் ஜேம்ஸ் இரத்தினம்—

மாநாட்டுக்கென தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து தொடக்க நாளே வந்து சேர்ந்திருந்த மேற்கு செருமானி நாட்டுப் பிரதிநிதியும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் துணைத்தலைவருமான பேராசிரியர் ஜெனர்ட்—

கனடா நாட்டில் பிறந்தாலும் காஞ்சிபுரம் சேலை கட்டி—பொட்டிட்டு பூச்சூடி—பழந்தமிழர் பண்பாட்டின் இலக்கியமாகத்தோன்றிய பேராசிரியை செல்வி; பெரண்டாபெக்—

வீரமாமுனிவரின் வழியிலே — இன்றும் தமிழ்த்தொண்டாற்றி வரும் ஆராய்ச்சி அறிஞர் — இத்தாலிய நாட்டு ஜோசப் விக்கி—

மாநாட்டு அமைப்புச் செயலாளர் கட்டிடக் கலைஞர் வி. எஸ். துரைராசா—

இவர்கள் எல்லாம் மங்கல வாத்தியம் முழங்கிட, மாநாட்டு மேடையை நோக்கி வந்துகொண்டிருந்தனர்!

மேடையில் இவர்கள் அனைவரும் ஏறியதும் மக்கள் எழுப்பிய ஆனந்தக் கரகோஷம் அடங்க சில மணித்துளிகள் பிடித்தன!

மக்களின் அந்த மகிழ்ச்சிப் பிரவாகத்துக்கு மத்தியில் வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகளார் தமிழ்த்தொண்டுசெய்துவரும் தமது திருக்கரங்களினால் மலர் மாலை சூட்டப்பட்டிருந்த குத்துவிளக்கை ஏற்றி வைத்தார்.

ஆம், தமிழ் விளக்கு ஏற்றிவரும் அந்த ஞானச்சுடர் விளக்கு குத்துவிளக்கை ஏற்றிவைத்து கோலத் தமிழ் மாநாட்டை ஆரம்பித்து வைத்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

முதலாவது அனைத்துலகத் தமிழ் மாநாட்டை ஆரம்பித்து வைக்கும் பேறு மலேசிய நாட்டு பிரதமர் துங்கு அப்துல் ரகுமானுக்கு கிடைத்தது. அனைத்து மொழியும் வாழவேண்டுமென்ற கருத்துடைவர் அவர்!

இரண்டாவது மாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவரும் மிகச்சிறந்த கல்விமானுமாகிய காலஞ்சென்ற ஜாகிர் உசேன் தொடக்கி வைத்தார். அனைத்துமொழியும், கலாசாரமும் வாழ வேண்டுமென்கின்ற கருத்தைக் கொண்டவர்—தமிழ்க் கலாசாரத்தின் தொன்மைச் சிறப்பை உணர்ந்தவர்—அவர்!

ஈழத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழ் மாநாட்டை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கும்படி இலங்கைக் குடியரசுத் தலைவரிடம் கேட்டுக்கொள்ள மாநாட்டு அமைப்பாளர்கள் தவறவில்லை!

ஆனால்—அனைத்துலகு தழுவிய இந்தத் தமிழ் மாநாட்டை திறந்து வைக்கின்ற அரிய வாய்ப்பை, இலங்கைக் குடியரசுத் தலைவர் ஏனோ தானாகவே நழுவவிட்டு விட்டார்!

அதுவும் ஒரு வகையில் நல்லதாகவே போய் விட்டது!

அதன் காரணமாகவே தமிழ் வாழ—தமிழ் உயர— உழைக்கின்ற தூய்மையான தமிழ்க் கரங்கள் — தனிநாயக அடிகளாரின் கரங்கள்—மாநாட்டைத் துவக்கி வைத்திட முடிந்தது.

'இந்தப் பாதிரியார் யாழ்ப்பாணத்தவர். தூத்துக் குடியில் வசிக்கிறார். உலகமெலாம் சுற்றுப் பிரயாணம் செய்து எங்கெங்கும் தமிழின் பெருமையை எடுத்துச்சொல்லி விட்டு திரும்பியிருக்கிறார். அடடா? எவ்வளவு அழகாக ஒவ்வொரு சொல்லையும் நிறுத்து அமைத்து அழகிய தமிழ் நூல் எடுத்துக் காட்டுக்களுடன் அவர் சொற்பொழிவு ஆற்றினார்!

'என்னை நன்றாக இறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்
செய்யுமாறே!'

என்று அவர்சொற்பொழிவை முடித்த பாணி எவ்வளவு நன்றாக இருந்தது—'

— 1953ம் ஆண்டளவில் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழாவின் போது தனிநாயக அடிகளார் ஆற்றிய சொற்பொழிவு கேட்டு அதில் மயங்கிய கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதிய வாசகங்களே மேலே காணப்படுபவை!

ஆம், அன்று தொட்டு தனது பிறவிப்பயன் தமிழ்த் தொண்டே எனும் உயரிய இலட்சியத்துடன் வாழ்ந்து வரும் தனிநாயக அடிகளார் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைத்ததன் பின்னர்—

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும்
காணோம்!'

எனும் தமிழ்த்தாய் வணக்கப் பாடலை — பாரதியின் பாடலை—கணீரென்ற குரலில் பாடுகிறார் திருமதி சரஸ்வதி பாக்கியராசா அவர்கள்!

எல்லோரும் எழுந்து நின்று தமிழ் அன்னைக்கு வணக்கம் செலுத்துகிறோம்!

இதைத் தொடர்ந்து மாநாடு ஆரம்பமாகியது!

—வளரும்

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


6 வது திகிலூட்டும் வாரம்!

# சென்ட்ரல்

(மருதானை) 2, 6, 9.30
(ஞாயிறு காலை 10 மணிக்கு)

## ராஜேஸ்வரி

(மட்டுநகர்) 10.30, 2.30, 6.30, 9.30

சிறந்த இசையமைப்பு சங்கீதம் நகைச்சுவை கலந்த தேன்போல் இனிக்கும் திரையோவியம்!

முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற நகைச்சுவைச் சித்திரம்



நாகேஷ் — விஜயலலிதா

எம். ஆர். ஆர். வாசு

— நடித்த —

# தேன் கிண்ணம்

( பாஸ்கள் ரத்து )

3-வது வெற்றி வாரம்

## செல்ல மகால்

வி. எஸ். தி பிலிம்ஸ் வெளியீடு

நா கே ஷ்



கே. ஆர். வி ஜ யா


சுந்தரராஜன்—விஜய லலிதா நடித்த

# கல்யாண ஊர்வலம்

3-வது வாரம்

## கெயிட்டி

# ஜக்கம்மா



தமிழில் வெளிவரும் முதல் கௌபோய் திரை விருந்து

ஜெய்சங்கர் - சாவித்திரி
உஷா S. V. சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
மனோரமா

2-வது வாரம் கிங்ஸ்லி-பிளாசா
லிடோ (யாழ் நகர்)

முத்துராமன், ஜெயலலிதா, சுந்தரராஜன்,
சாவித்திரி, சோ, மனோரமா, சசிகுமார்,
ஸ்ரீலேகா, M. R. R. வாசு, நடித்தது.

# சூரியகாந்தி



டைரக்ஷன்: சீனிவாசன்

80-வது நாள் கெப்பிட்டல்—விஜயா (மட்டுநகர்)
சிவாஜி-கே. ஆர். விஜயா, நடித்த—

# சொர்க்கம்

ஈஸ்ட்மன் கலர்


இப்பத்திரிகையை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194 ஏ இலக்கத்தில்
1974ம் வருடம் மார்ச் மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.